உ

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

# சிவநெறி

முத்திங்கள் சஞ்சிகை


மலர் 5
இதழ் 1

**SIVANERI**

யுவ வருடம்
தை, மாசி, பங்குனி.

1996


உள்ளே


* காயத்ரீ மந்திரம்
* சிவன் பாவவிமோசனம் பெற்ற திருத்தலம்
* தை மாதத்திற்கு ஏன் இந்த சிறப்பு?
* தெய்வ நாடகம்
* இடையன் உடலில் புகுந்து திருமந்திரம் அருளிய சிவயோகி
* அருள் மழை பொழியும் அன்னை பத்ரகாளி அம்பாள்
* சிவராத்திரி




விலை
15 ரூபா

பாரும் விசும்பும் பரவித் துதிக்கும் பதாம்புயத்தின்
சீருஞ் சிறப்பு மறியாத மூடர் செருக்கடங்கத்
தேரி லிவர்ந்து திரிபுரம் மாயச் சிரித்தவளே
சேருமடியார் தமைக் காக்கும் பத்திர காளிகையே!

-தமிழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனார்


திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

*வானுலகு மண்ணுலக வாழ மறைவாழப்*
*பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க*
*ஞானமத மைந்துகர மூன்றுவிழி நால்வாய்*
*யானைமுக னைப்பரவி யஞ்சலி செய்கிற்பாம்.*

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே.**

திருச்சிற்றம்பலம்


# சிவநெறி

## முத்திங்கள் இதழ்

393. திருஞானசம்பந்தர் வீதி. திருக்கோணமலை.


## பத்திரகாளி அம்பாள் எம்மைக் காப்பாள்

லோகமாதாவாய், தயாபரியாய், ஈஸ்வரியாய்,காமாட்சியாய், கொற்றவையாய் அடியார்க்கு அருளும் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளைத் தரிசித்தவாறே -

"சிவநெறி" சஞ்சிகையின் ஐந்தாவது ஆண்டின் முதலாவது இதழை அருளன்பர்களுக்கு வழங்குகின்றோம்.

கேடதனை நீக்கிக் கேட்டவரம் தருவாள் காளி அம்பாள் - இவ்வாறு மகாகவி பாரதியார் பாடுகிறார்.

பொய்மை ஊதித்துடைத்துக் களித்தாடும் பத்ரகாளிகையே - இவ்வாறு கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனார் அவர்கள் போற்றிப் பாடியுள்ளார்.

தை பிறந்தது. ஈழத்துச் சைவத்தமிழ் மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான அமைதி இன்னும் பிறக்கவில்லை.

சித்திரை வருடப்பிறப்பு வந்து கொண்டிருக்கிறது. யுவ வருடம் எம்மிடமிருந்து விடை பெறத் தயாராகிறது.

தாது வருஷப் பிறப்பை எதிர்கொள்ள சைவத்தமிழ் மக்கள் தயாராகி வருகின்றார்கள்.

புத்தாண்டில் அமைதியும் செழிப்பும் மீண்டும் எம்மத்தியில் நிலவட்டும் என்று பிரார்த்தித்து, சக்தியைத் தொழுவோம்.

அம்பாளின் அன்பும் அருளும் இன்றி உலகில் என்ன நடக்க முடியும்?

இந்த அண்டமே அவளின் கைப்பந்து தானே! அம்பாள் எம்மைக் காப்பாள்.

### அட்டைப்பட விளக்கம்

திருக்கோணமலையின் சக்திப் பிழம்பாய், தீராத நோய் தீர்க்கும் தெய்வமாய், பல்லாயிரக்கணக்கான அடியார்கள் பயபக்தியுடன் வணங்கும் பராசக்தியாய் பக்தர்களுக்கு அருள்மழை பொழியும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சித்திரத்தேரில் ஆரோகணித்து வரும் காட்சியை அட்டையில் காண்கிறீர்கள்.

கிழக்கு மாகாணத்தில் மூன்று தேர்களைக் கொண்ட ரதோற்சவத் திருவிழா திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் மட்டுமே இடம் பெற்று வருகிறது.

படம் : திரு. நாகராஜா கணபதிப்பிள்ளை அவர்கள்

### பக்தர்களின் பார்வைக்கு

**மகோற்சவம்**

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மகோற்சவம்

கொடியேற்றம் : 23 -03 - 1996
இரதோற்சவம் : 01 -04 -1996
தீர்த்தோற்சவம் : 02 -04 -1996
பூங்காவனம் : 03 -04 -1996

திருக்கோணமலை அருள்மிகு கோணேசராலயம்

கொடியேற்றம் : 02 - 04 - 1996
தீர்த்தோற்சவம் : 19 - 04 - 1996

திருக்கோணமலை அருள்மிகு ஆலடி விநாயகராலயம்

அலங்கார உற்சவ ஆரம்பம் : 24 - 04 - 1996
தீர்த்தோற்சவம் : 03 - 05 - 1996

திருக்கோணமலை முத்துக்குமார சுவாமி கோவில்

கொடியேற்றம் : 22 - 05 -1996
இரதோற்சவம் : 30 - 05 -1996
தீர்த்தோற்சவம் : 31 - 05 -1996


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் அருளைப் பெற நற்காரியங்களைச் செய்க!

ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா

அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன் எனும் இந்த நல்லுணர்வுகளுடன் தான் நாங்கள் சிவனை வணங்குகின்றோம். இது எல்லா யுகங்களுக்கும் பொருத்தமானது.

மனிதன் சமுதாய ரீதியாக அன்பை வளர்க்க வேண்டும். அன்பு இல்லாமைதான் உலகத்தில் சகல பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகிறது என்று சொல்லலாம்.

சகல சமயங்களுக்கும் பரஸ்பர மரியாதையும் மற்றும் அனுதாபம் காட்டுகிற தன்மையும் இருக்க வேண்டும்.

தத்துவ ரீதியாக சமயங்களிடையே கருத்து பேதங்கள் இருக்கலாம். ஆயினும் இதயத்தில் எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும்.

## சிவ வணக்கம்

சிவ என்பது அன்பு. சிவனுடைய புனித உருவங்களை வணங்க வேண்டும் என்பது மட்டுமல்ல. ஒவ்வொரு ஜீவராசியும் தன் இதயத்தில் சிவனை வணங்க வேண்டும். அந்த ஜீவராசிகளுக்குச் சேவை செய்ய வேண்டும். சுவாமி விவேகானந்தர் போன்ற மகான்கள் இக்கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்**
**எம்பெருமான்..............**

திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் இப்படிப் பாடுகின்றார்.

எல்லாமே கடவுளின் அனுக்கிரகத்தில் நடைபெறும். ஏமாற்றம், பொய் இன்றி வாழ்க்கையில் முன்னேற முடியாது என்று சிலர் நினைக்கிறார்கள். இக்கருத்துத் தவறானது.

நல்லகுணமுடைய ஜீவராசிகள் கர்ம வினைப்பலன் பற்றிச் சிந்திக்காமல், கடமை காரணமாக நற்காரியங்கள் செய்ய வேண்டும். அப்போது இறைவனுடைய ஆசீர்வாதம் எதிர்பாராத அற்புதமான வகையில் நிச்சயம் கிடைக்கும். அவர்கள் கடவுளுடைய மடியின் மேல் அமர்ந்திருக்கிறார்கள். மேலும் மனச் சாந்தியும் அடைவார்கள்.

## பிரார்த்தனை

பிருஹதாரண்ய உபநிஷதத்தில் இவ்வாறு ஒரு பிரார்த்தனையுள்ளது.

"ஓம் அஸதோமா ஸ்த்கமய தமஸோ மா ஜியோ திர்கமய. ம்மிருத்யோர்மா அம்ருதம்கமய"

அதாவது "நிலையான பரமாத்துமம் என்பது உண்மை. இக்கருத்தை உணர்ந்தால் இருட்டிலிருந்து புனித வெளிச்சத்துக்கு நான் செல்வேன். மேலும் ஜீவாத்மன் சாகமுடியாத நிலையை அனுபவித்து உணரப்பிரார்த்திக்கின்றேன்" என்பதாகும்.

எந்தப் பாவத்தைச் செய்தாலும் மரண நேரத்தில் மன்னிப்புக் கேட்டால் சொர்க்கத்திற்குப் போக முடியும் எனச் சிலர் நினைக்கிறார்கள். இக்கருத்துப் பிழையானது.

ஆயினும் ஒரு மனிதன் பயங்கரபாவம் செய்தால் இப்பாவத்தை உணர்ந்து நேர்மையுடன் ஒப்புக் கொண்டு இனிச் செய்வதில்லை என்று சங்கல்பம் எடுப்பின் சில நேரம் சூழ்நிலையைப் பொறுத்தவரை கெட்ட கர்மவினையைக் குறைக்கலாம். ஆனால் ஒரு வேஷம் அல்லது ஆசார முறைபோல் இவ்வாறு பழக்க முடியாது.

## ஆன்மீகப்பாதை

ஆன்மீகப்பாதையில் ஒரு சாதகன் பிரவேசிக்கும் போது உடனடியாக முழுக்க தெய்வீக அனுக்கிரகத்தை எதிர்பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பாலங்களைக் குளிர்சாதனப் பெட்டியுள்ளே வைத்தால் ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களின் பின்னர் அப்பாலங்களைக் குளிரோடு எடுக்கலாமா? இல்லை. சிறிது நேரம் சென்றபின்தான் பாலம் குளிராகும். இதுபோன்று கொஞ்சம் கொஞ்சமாகத்தான் ஆன்மீக வளர்ச்சிப் பாதையில் செல்லலாம். திடீரென முழு ஆத்மீக சக்தியையும் அனுபவிக்க முடியாது.

இதனை இன்னொரு உதாரணமூலம் சுட்டிக் காட்டலாம். சிறிய மின்மாற்றி. அதனுடைய அளவிற்குக் கூடுதலான மின்சாரத்தை ஏற்றுக் கொள்ளாது. மின்மாற்றியில் உள்ள அளவுவரை தான் மின்சாரம் பெறலாம்.

யோக தத்துவ ரீதியாகச் சாதனை செய்தால் கொஞ்சம் கொஞ்சமாக ஆன்மீக மின் மாற்றியால், பெரும் சக்தியை வளர்க்கலாம். நிறைய ஜென்மங்களுக்குப்பின் இந்த ஆன்மீக மின்மாற்றியை வளர்க்க வேண்டும்.

அதிகமான பிறவிகளில் கர்மயோகம் (சமுதாய சேவை) மற்றும் பக்தி யோகம், சகுண வழிபாடு செய்ய வேண்டும். அதன் பிறகுதான் தரமான முறையில் ராஜயோகம் செய்யலாம்.

ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா
அவர்களின் ஆனந்தஸாகரர்
நூலிலிருந்து....

## சிவனடியாரை வழிபட்டு முத்திபெற்ற நாயன்மார்

சிவனடியார்களை வழிபட்டு முத்திபெற்ற நாயன்மார்களின் எண்ணிக்கை 19 அவர்களின் பெயர் வருமாறு:

திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், இளையான்குடிமாற நாயனார், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்ட நாயனார், அமர்நீதி நாயனார், ஏனாதிநாயனார், மானக்கஞ்சாற நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார்,

காரைக் காலம்மையார், மூர்க்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், புகழ்ச்சோழ நாயனார், நரசிங்கமுனையரைய நாயனார், கலிக்கம்ப நாயனார், சத்தி நாயனார், முனையடுவார் நாயனார், இடங்கழி நாயனார், நேச நாயனார்.

## அழைக்கக் குறைதீர்ப்பாள்
## காளி குலதெய்வமே!

நீறணி மேனியன் நெற்றிக்கண் கொண்ட
நிமலனைத்தன்
பேறெனக் கொண்ட பெருமாட்டி கோணைப்
பெருநிலத்தில்
வீறுகொண் டெட்டுத் திசைகளுந் தன்பேர்
விளக்கி நிற்கும்
மாறிலாக் காளி மனம் வைத்தால் துன்பம்
மறைந்திடுமே.

கற்றாருங் கல்லாத பேர்களுங் கையேந்திக்
காளியென்றால்
எற்பூர்ந்து நிற்பாள் இதயத்தில் ஏறிநின்
றின்பளிப்பாள்
கற்பூர தீபத்தின் கண்ணின்று யாவர்க்குங்
காட்டிடுவாள்
சொற்கோண மாமலை யின்சோதி கண்டீர்–
யான் சொல்லரிதே.

பத்திர காளியின் பாதச் சிலம்பொலி
பட்டிடவே
வித்தகர் தம்முடன் விஞ்ஞையர் யாவரும்
வீணையினை
வைத்தடி போற்றி வணங்குதல் கண்டுயர்
வானவர்கள்
இத்தரை மீதில் இறங்கினர் தாயை
இறைஞ்சினரே.

வேப்பங் குழைக்கொத்தும் வெள்ளிப் பிரம்–
பும் விளங்குகையில்
காப்பு மணிந்து கடைக்காற் சிலம்பு
கலகலென
மூப்பும் பிணியு முடையார் பணிந்து
முறையிடுவார்
கூப்பீட் டழைக்கக் குறைதீர்ப்பாள் காளி
குலதெய்வமே.

தினமும் வலம்வந்து தென்கைலை யாளின்
திருவடியை
மனதி லிருத்தி மறைந்த பொருள்மீட்க
வந்து நிற்பார்
அனையே எடுத்தாரைக் கண்முன்னே காட்–
டம்மா என்றிரக்கக்
கனவின் வெளிவந்து காட்டுவாள் பத்திர
காளிகையே.

கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனாரின்
"காளி கவிமாலை"யில் இருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மழை பொழியும்

# அன்னை பத்ரகாளி அம்பாள்


வேதாகமமாமணி
சிவஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
பிரதம குரு - ஆதீனகர்த்தா
அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள்
தேவஸ்தானம்
திருக்கோணமலை.


சக்தி வழிபாடு மிகவும் பழைமையானது. இயற்கைக்கு இறைமைத் தன்மை கற்பிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே சக்தி வழிபாடும் ஏற்பட்டிருக்கிறது.

மனிதன் தனக்கு உண்டி கொடுத்து உயிரளிக்கும் பூமியைத் தெய்வமாக, பூமாதேவியாகப் போற்றி வழிபட்டு வந்திருக்கிறான்.

பூமாதேவி வழிபாடே சக்தி வழிபாடாக விரிந்து பரவி வந்திருக்கிறது.

அள்ளி வழங்கும் அன்ன பூரணியாக, தாய்த் தெய்வமாக அண்டங்கள் யாவையும் ஈன்று பராபரிக்கும் உலக அன்னை வழிபாடாக சக்தி வழிபாடு இன்று காட்சி தருகிறது.

வேதங்களே சக்தி வழிபாட்டைப்பற்றிக் கூறுகின்றன.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் என்னும் நால்வரும் சக்தியின் ஏவல்வழி நிற்பவர்கள் எனச் சாக்த மதம் கூறும்.

பிரமனிடத்தில் படைப்புச் சக்தியாகவும்-

விஷ்ணுவிடத்தில் காத்தற் சக்தியாகவும்-

உருத்திரனிடத்தில் அழித்தற் சக்தியாகவும்-

மகேஸ்வரனிடத்தில் மறைத்தற் சக்தியாகவும் நிலைபெற்றுள்ளதெனலாம்.

சக்தி என்பது இறைவனின் வல்லமை.

சக்தியின்றேல் சிவமில்லை; சிவமின்றேல் சக்தியில்லை என்று கூறுவார்கள்.

சிவத்தினின்றும் சக்தியைப் பிரிக்க முடியாது. இது இந்து மதக் கோட்பாடு.

இலங்கையில் உள்ள சக்தி பீடங்களில் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் சிறப்புமிக்க வரலாறைக் கொண்டதாகும்.

இராஜராஜசோழனின் மகன் இராஜேந்திர சோழன் இலங்கையை ஆண்டான். அவன் தனது காலத்தில் இலங்கையில் பல இந்துக் கோயில்களைக் கட்டினான.

திருக்கோணமலை மாவட்டத்தில் அவன் காலத்தில் பல சைவாலயங்கள் கட்டப்பட்டன.

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் சைவாலயங்கள் பல அழிக்கப் பட்டன.

## ஆலயத்தின் தொன்மை

திருக்கோணமலை ஸ்ரீ பத்திர காளி ஆலயத்தின் தொன்மை பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இவ்வாராய்ச்சிகளை முன்னின்று நடத்தியுள்ளனர். ஆலயத்தின் கற்றூண்களில் உள்ள எழுத்துக்கள் அவர்களுக்கு ஆராய்ச்சியில் உதவின.

அவ்வாராய்ச்சியாளர்கள் இக்கோவில் போர்த்துக்கீசர் காலத்துக்கு முற்பட்டதெனக் கூறினார்கள்.

இவ்வாலயம் 11ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

## ஆலய வரலாறு

மதுரையிலிருந்து காசியில் துறவறத்தை மேற்கொள்ள ஓர் அந்தணர் ஸ்தலயாத்திரை சென்றார். அவர் இராமேஸ்வரத்தில் தங்க நேர்ந்தது. அங்கு ஓர் இரவு ஒரு கனவினைக் காண நேர்ந்தது.

"கடற்கரையோரமாக உள்ள இடத்தில் செவ்விரத்தைக்கு அடியில் ஒரு கிடாரத்துள் காளியின் தாமிர விக்ரகமும் மணி, தீபங்களும் உண்டு. அதனைத் தோண்டி எடுத்து அக் காளிக்கு நித்ய பூஜைகளைச் செய்வாயாக" என்று அக்கனவில் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி அந்த அந்தணர் திருக்கோண மலைக்கு வந்து, குறிப்பிட்ட இடத்தைத் தோண்டினார். அங்கு காளி விக்ரகம் வெளிப்பட்டது. அந்த இடத்திலேயே ஆலயம் ஒன்றை அமைத்து அவர் பூஜை செய்து வரலானார்.

## விசேட உற்சவங்கள்

தை மாதத்தில் லக்ஷார்ச்சனையிலேதினமும் அபிஷேகம், யந்திர பூசை முதலியனவும் இறுதியில் சங்காபிஷேகமும் நடைபெறும்.

பங்குனியில் வருடாந்த மகோற்சவம் பங்குனி உத்திரத்துடன் முடிவுறுகிறது.

வைகாசியில் அம்பிகைக்கே உரித்தான பொங்கல், திங்களன்று நடைபெறுகிறது.

ஆடிப்பூரத்தினம் அம்பாளின் விசேட தினமாகும். அன்று தண்டிகை உற்சவம், திரு வூஞ்சல் விழா இடம்பெறும்.

புரட்டாதியில் நவராத்திரி தினங்களில் அம்பிகை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருவுருவில் காட்சியளிக்கின்றாள்; கேதார கௌரி விரதமும் ஆரம்பித்து ஐப்பசியில் தீபாவளி அமாவாசையுடன் நிறைவேறுகிறது.

பத்திரகாளி அம்பாளை உள்ளன்புடன் பாடிப்பரவி அன்னையின் அருள்பார்வையால் பலவிதமான பேறுகளையும் பெற்றுப் பூரணமான ஆனந்த வாழ்வு பெற முயலுவோமாக!

## நல்வாழ்வு வாழ...

இனிதாக அன்புடன் பேசுவது, இதமானதைப் பண்புடன் பேசுவது, உள்ளதை உள்ளபடித் தெளிவாகப் பேசுவது—இம்மூன்று குணங்களும் உள்ளது தான் சத்தியவாக்கு.

இத்தகைய சத்தியவாக்கைத் துணை கொண்டு பொருள், புகழ் சம்பாதித்துக் கொள்ளுங்கள்.

இத்தகைய வாழ்க்கை தான் நிறைவான—வெற்றி பெற்ற நல்வாழ்வு.

# நாகரீகம்

திருமலை சுந்தா

வீட்டுக்கு வந்த விருந்தினர்களை வெறும் மேலுடன் வரவேற்றேன்.

அவர்களுடன் அதே கோலத்தில் இருந்து பேசவும் முற்பட்டேன்.

என் மனைவி என்னை ஆத்திரமாகப் பார்த்தாள்.

எனக்கு புரியவில்லை.

என்னோடு உரசி நின்று – "உங்களுக்கு வெட்கமாக இல்லையா? வந்தவர்கள் கொஞ்சம் நாகரீகமான ஆக்கள். உங்கள் பட்டிக்காட்டுத் தனத்தை காட்டுகிறீர்களே" என்று குசு குசுத்தாள்.

எனக்கும் வெட்கம் வந்தது?

என்றாலும் மனைவிக்காக நடிக்க என் மனம் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

மீண்டும் பார்த்தாள். அவள் கண்களில் புயல் இருந்தது. மெதுவாக நழுவி மேல்சட்டையை போட்டு வந்து என் மனைவியை சந்தோசப் படுத்தினேன்.

பத்து நாட்களின் பின் –

காளி கோவில் திருவிழாவிற்கு வந்திருந்தோம்.

சன நெரிசல். மனைவி என்னைச் சுரண்டினாள்.

"போங்க. சுவாமியை தூக்க போங்க. சேட்டை கழட்டி தாங்க. கழட்டுங்க சேட்டை."

நான் மனைவியை பரிதாபமாகப் பார்த்தேன். என் வீட்டுக்கு வந்த இருவருக்காக சேர்ட் போட்டுக் கொண்டு பேசுங்கள் என்றவள் இப்போது இந்த ஆயிரமாயிரம் சனக் கூட்டத்துக்க சேர்ட்டை கழட்டி சுவாமியை தூக்கச் சொல்கிறாளே......

வீட்டுக்குள் சேட் போடாவிட்டால் நாகரீகமில்லை. இங்கு, கோவிலுக்கு வந்தால் சேர்ட் கழட்டி வெறும் மேலுடன் நிற்பதுதான் நாகரீகமோ?.

பார்க்க பாவமாக நின்ற மனைவியின் பரிதாப வார்த்தைகளுக்காகச் சேர்ட்டை கழட்டினேன்.

மனைவி என்னைப் பார்த்தாள்

அவள் பார்வை......

பக்திக்கு ஏது...நாகரீகம் என்பது போல.... என்னை....

## சக்தியின் பயன்

சக்தி சிவத்தில் அடங்கியிருந்தால் பயன்படாது. வெளிப்படும் போது தான் பயன்படும். அதன் பயனை ஆன்மாக்கள் பெற்று உய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையின் இலட்சியத்தை விளக்கும் காயத்ரீ மந்திரம்

டாக்டர் புலவர் சிவஸ்ரீ
வை. சோமாஸ்கந்தக் குருக்கள்
(டி. ஏ. சி)

விசுவாமித்திர மகரிஷி தவம் செய்தார். பெறற்கரும் பேறு பெற்றார். அவர் அருளிய மந்திரமே காயத்ரீ.

காயத்ரீ இந்துக்களின் தேசிய மந்திரம். இம்மந்திரத்தினை இந்துக்கள் அனைவரும் ஜபம் செய்யலாம் என்பது சுவாமி சித்பவானந்தரின் கருத்தாகும்.

மனித குலத்துக்கே இலட்சியமாக இருப்பது காயத்ரீ மந்திரமாகும். வேதத்தினுடைய சாரம் காயத்ரீயில் அடங்கியுள்ளது. மனித வாழ்க்கையின் இலட்சியத்தை அது விளக்குகிறது.

## மனித குலம் உய்ய

பல ஆயிரம் ஆண்டுகளாகப் பொதுவாக இருந்து வருகிற மந்திரம் காயத்ரீ ஒன்றேயாகும். மனித குலம் உய்யும் நெறிக்கு விசுவாமித்திர மகரிஷி இம்மந்திரத்தை உவந்து நல்கியுள்ளார்.

ஒரு மந்திரத்தின் பொருள் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அதனை மன ஒருமைப்பாட்டோடு ஜபம் செய்கின்றவர்களை அது பக்குவப் படுத்துகிறது. அந்த வல்லமை மந்திர சக்தி என்று கூறப்படுகிறது.

மந்திரத்தின் ஓசைக்கு அளப்பரும் சக்தி இருக்கிறது. "நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த மறைமொழியே மந்திரம்" - என்று தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

மாக்ஸ் முல்லர், பென்பே, கோல்புறூக், கிறிபித், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் முதலான உலகப் பேரறிஞர்களும் காயத்ரீ மந்திரத்தின் மகிமையைப் போற்றியுள்ளார்கள்.

'We meditate on that adorable light of the Divine Savitri who should rouse our thoughts'-

**-Max Muller**

'May we receive the glorious brightness of this, the generator of the God who shall prosper our works"-

**-Ben Fey**

"Let us meditate on the adorable light of the divine rule (Savitri); may it guide our intellects"

**-Colebrook**

"May we attain that excellent glory of Savitri the God; so may he stimulate our prayers"-

**-Griffith**

"We meditate on the adorable glory of the radiant Sun May he inspire our intelligence"-

**Dr. S. Radhakrishnan**

## ஓதும் முறை

மந்திர உபதேசம் குருவிடமோ, தந்தையிடமோ பெறலாம். குருவோ, தந்தையோ சிரத்தையோடு உபதேசம் செய்ய மிகுந்த மன ஒருமைப்பாட்டோடு அதனைத் திருப்பிச் சொல்லிக் காட்டி மிகச் செம்மையான ஒலி இசை முறையை உணர்ந்து அதன்படி ஓதி வரவேண்டும்.

காலையில் காயத்ரீயாகவும், பகலில் சாவித்திரியாகவும், மாலையில் சரஸ்வதியாகவும் இம்மந்திரம் மூவகைச் சக்தியாகச் செயற்படுகிறது.

ஒரு முறைக்குப் பத்துத் தடவை ஜபம் செய்ய வேண்டும். பத்து முறைக்குக் கூடுதலாக ஜபம் செய்யின் சிறந்த பலனை நல்கும். 27, 54, 108 என்ற எண்ணிக்கையில் ஜபம் செய்யலாம்.

## காயத்ரீ மந்திரம்

1. ஓம் : Om
2. பூர் புவ ஸுவ: Bhoorbhuvasvaha
3. தத்ஸ விதுர் வரேண்யம்:
   Thathsa Vithur Varaenyam
4. பர்கோ தேவஸ்ய தீமஹி
   Bhargo Devasya Dheemahee
5. தி யோ யோ ந: ப்ரசோதயாத்
   Dheeyoyona Prachodayath

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையாக உணர்ந்து காயத்ரீ மந்திர ஜபம் செய்வது பற்றிய விபரங்களை அறிய வேண்டும். காயத்ரீ சந்தசின் ஓசை லயத்தைச் சரியாக அவதானித்துப் பழக ,வேண்டும். சொற்களை நிறுத்திச் சொல்ல வேண்டும். ஐந்து இடங்களில் நிறுத்திச் சொல்ல வேண்டும்.

## காயத்ரீ பொருள் விளக்கம்

ய: யார், ந: நம்முடைய, கிய: அறிவை, ப்ரசோதயாத்: தூண்டுகிறாரோ, தக்: அந்த, தேவஸ்ய: சுடருடைய, ஸவிது: கடவுளின், வரேண்யம்: மேலான, பர்க: ஒளியை, தீமஹி: தியானிப்போமாக!

"யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க்கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக!"

## அரசனின் அகந்தையை அடக்கிய துறவி

பட்டினத்தார் பெரும் செல்வந்தர். துறவறம் பூண்ட அவர் தோப்பு வழியே ஒரு நாள் சென்று கொண்டிருந்தார்.

அமைதியான ஓரிடத்தில் அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினார்.

அந்த நேரம், அரசனின் அரண்மனையில் திருடி விட்டு வந்த திருடர்கள், துரத்திக்கொண்டு வந்த வீரர்களுக்குப் பயந்து நகைகளைப் பட்டினத்தார் அருகில் போட்டு விட்டு ஓடிவிட்டார்கள்.

வீரர்கள் வந்தார்கள். பட்டினத்தாருக்கு அருகில் நகைப்பொட்டலங்கள் கிடப்பதைக் கண்டார்கள்.

அவ்வளவுதான். பட்டினத்தாரைக் கைது செய்து கூட்டிச் சென்றார்கள்.

அரசனும் தீரவிசாரிக்காமல் பட்டினத்தாரைக் கழுவிலேற்ற உத்தரவு இட்டான்.

பட்டினத்தார் கழுமரத்துக்கு அருகில் கொண்டு வரப்பட்டு நிறுத்தப்பட்டார். அவர் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தார்,

அரசன் பத்ரகிரிக்கு ஆத்திரம் வந்தது. ஏன் சிரிக்கிறீர் - என்று கேட்டான்.

ஏன் சிரிக்கிறேனா? இந்த மரம் (அரசன்) இந்த மரத்தை (தன்னைக்காட்டி) அந்த மரத்தில் ஏற்றப்போகிறதோ" இவ்வாறு கழுமரத்தைக் காட்டிக் கேட்டார் பட்டினத்தார்.

மறு நிமிடம் கழுமரம் தீப்பற்றி எரிந்து சாம்பலாகியது. அரசன் பயந்து போனான்.

பட்டினத்தடிகளைத் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று போற்றிப் பாராட்ட அரசன் எண்ணினான். ஆனால் பட்டினத்தடிகள் அசைந்து கொடுக்கவில்லை.

கோயில் வாசலே கதி என்று அமர்ந்து சமாதியில் ஆழ்ந்து விட்டார் பட்டினத்தடிகள்.

தினமும் அரசன் ஆலயத்துக்கு வந்தான். தன்னோடு அரண்மனைக்கு வரும்படி பட்டினத்தடிகளைக் கெஞ்சினான். பட்டினத்தார் அசைந்து கொடுக்கவில்லை.

அரசன் மனம் சலித்துப்போய் விட்டது.

பட்டினத்தடிகளைப் பார்த்து, "இப்படித்துறவறம் மேற்கொள்வதில் என்ன பெருமை?" என்று அரசன் கேட்டான்

பட்டினத்தார் வாய்விட்டுச் சிரித்தார் "இதோ பார் நீ நிற்க நான் அமர்ந்து இருக்கிறேன் அல்லவா! நீயோ அரசன் நானோ துறவி. யார் மேலானவர்?" பட்டினத்தார் இவ்வாறு கேட்டார்.

அந்த வினாடியே அரசன் தனது சிறுமையை உணர்ந்து கொண்டார். துறவு வாழ்க்கையின் பெருமையைத் தெரிந்து துறவியானார்.

அவரே ஞானி பத்ரிகிரியார் என போற்றப்பட்டார்.

## ஆசையை அகற்றும் கருவியே பக்தி

பக்தி என்றால் என்ன?

ஆசைகளை அகற்றுவதற்கே பக்தி, ஆசையை நிறைவேற்றுவதற்காக அல்ல.

இவ்வாறு நாரத பக்தி சூத்திரம் கூறுகிறது.

ஆன்மீக உய்வு என்பது லௌகீகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சி அல்ல என்பதில் முதலில் தெளிவு வேண்டும்.

வெகு காலமாகவே இறைவனை நமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருவியாகத் தான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

தேவைகள் பூர்த்தியானால் காணிக்கை செலுத்துவதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறோம்.

பக்தி என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாது இருக்கிறோம்.

ஆசைகளை அகற்றுவதற்கே பக்தி பயன்படுத்தப்படவேண்டும் என்கிறது நாரத பக்தி சூத்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகார சக்தியை அருள்பவள் நீயே பத்ரகாளித் தாயே பள்ளியெழுந்தருளே

பராசக்தியாய் நின்று பாரெலாந் தாங்கி
ஓராசக்தியாய் நின்று ஊழிகள் தோறும்
நராசக்தியாய் உயிர்த் தத்துவமாகிப்
பராசக்தியாய் அருள் புரிந்திடும்
அம்மையே
அரனொடு சதியாய் அவிர்சடை ஆடிய
பிரானொடு பாதியாய் நின்ற பிராட்டியே
தராதலத் துயர்திருக் கோலமாய் பதிவாழ்
பத்ரகாளித் தாயே பள்ளி யெழுந்தருளே

❀

ஆதார சக்தியென அகிலமெலாம் புரக்கும்
அபிராம வல்லியே அங்கயற் கண்ணியே
பாதார விந்தமதைப் பணிந்திடப் பாலகரும்
வேதாவும் பரதியும் மாதவரும்
திருமகளும்
கேதார கௌரியொடு கிளர்ஞான போதகியாம்
மாதாவெனும் தர்க்க மங்கையும் வந்தார்
நீதானெந் துணையம்மா நிமலையே
திருமலைவாழ்
பத்ரகாளித் தாயே பள்ளி
யெழுந்தருளே.

❀

ஓங்காரந் தன்னே உதிப்பவள் நீயே
ஓங்காரப் பொருளை உரைப்பவள் நீயே
ஹ்ரீங்காரந் தன்னே இனிப்பவள் நீயே
ஹ்ரீங்கார பீஜமாய் இருப்பவள் நீயே
ஆங்காரி யாகியே ஐந்தொழில் புரிந்திட
அதிகார சக்தியை அருள்பவள் நீயே
பாங்காக உன்னடியைப் பணிந்திட
வந்தோம்
பத்ரகாளித் தாயே பள்ளி
யெழுந்தருளே

❀

ஞானசிரோன்மணி பண்டிதர்
இ. வடிவேல் அவர்கள்
இயற்றிய ஸ்ரீ பத்ரகாளி
அம்பாள் திருப்பள்ளி
எழுச்சியிலிருந்து

## கீதையின் சாரம்!

பகவத் கீதையின் சாரத்தை மூன்று வசனங்களில் அடக்கி விடலாம்!

எப்படி?

சுவாமி சிவானந்தரிடம் சிலர் சென்றார்கள்.

"சுவாமி! எங்களால் வேதம், சாஸ்திரம், பகவத் கீதை, புராணங்கள் எதனையும் படிக்க முடியவில்லை. மிகச் சுலபமாக அத்தனை விஷயங்களையும் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். கீதையின் சாரம் என்ன? எங்களுக்குச் சொல்லித் தாருங்கள்" -

இவ்வாறு அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு சுவாமி சிவானந்தர்: "கீதையின் சாரத்தைக் கூறுவது சுலபம். மூன்றே வசனங்களில் கீதையை அடக்கி விடலாம்".

கேட்டவர்கள் வியந்தனர்.

சுவாமி: "அன்பு செய், சேவை செய், பிறருக்கு வழங்கு - இது தான் கீதையின் சாரம்" - என்றார்.

### காளியின் கருணை

மனிதனிடத்திலுள்ள ஆணவம் முதலிய அசுர குணங்களையும், நோய், துன்பங்களையும் அழிக்கின்றவள் காளி. தீய குணங்களை அழிப்பது, மனிதர்களை நல்லவர்களாக்குவதற்கும், நோய், துன்பங்களை நீக்குவது அவர்களைச் சுகதேகியாக வாழச் செய்வதற்குமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டு வருக! வருகவே!

செல்வி மயூரதி அமிர்தலிங்கம்

தமிழர்கள் குறிப்பாக இந்துக்கள் கொண்டாடும் விழாக்களில் சித்திரை புத்தாண்டு மிக முக்கிய விழாவாகும்.

நிறைமதி நாளெல்லாம் தமிழர்க்குத் தலையாய நாட்களே. இந்நிறைமதி நாள் திங்கள் தோறும் வருகின்றது.

ஒவ்வொரு நிறைமதி நாளும் ஒவ்வொரு வகையில் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. கார்த்திகையில் விளக்கீடாகவும், மார்கழியில் ஆதிரையாகவும், தையில் பூசமாகவும், மாசியில் மகமாகவும், பங்குனியில் உத்தரமாகவும் காட்சி தரும் விழா சித்திரைத் திங்களில் சித்திரை மீன் சேர்ந்த நாளாக காட்சிதருகின்றது.

இந்த மாதங்களின் பெயர்களாலேயே அந்த விழாக்கள் சிறப்புறுகின்றன. இருபத்தேழு நட்சத்திரங்களிலே ஒவ்வொரு திங்களில் சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தின் நிறைமதியாகக் காட்சி தருகிறான். அந்த நட்சத்திரங்களின் பெயரையொட்டியேதான் மாதங்களின் பெயர்கள் அமைவதைக் காணலாம்.

சந்திரன் தன்னிறைநாளை சித்திரை நட்சத்திரத்தோடு சார்ந்து நிற்கும் அம்மாதமே சித்திரை மாதமாகும். இது சௌர மாதம் எனப்படும்.

காதலரும் பிறரும் களித்து மகிழும் இச்சித்திரை நிறைநாள் விழாவை பழங்கால இலக்கியங்கள் பாராட்டிப் பேசுகின்றன. சங்க காலத்தையொட்டியிருந்த இருபெரும் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இவ் விழாவைப் போற்றுகின்றன.

தமிழர் தம் ஆண்டுப் பிறப்பும், சித்திரை மாதப்பிறப்பும் இரண்டும் ஒன்றே தான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும், முதலாவதாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றன.

தேமாவும், தேன்பலாவும் அரும் பழங்களை பாருக்கு நல்கி மக்கள் நாவினுக்கு நல்ல சுவையினைக் கொடுப்பதும் இக்காலத்திலேதான் மாறவேள் விழாக்காலமென இச்சித்திரையும் இதற்கு முன் வரும் பங்குனியும் இலக்கியங்களில் போற்றப்பெறுகின்றன.

எல்லாருமே தத்தமது வருடப் பிறப்பினை சம்பிரதாய பூர்வமாக கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகின்றனர். ஏப்பிரல் மாத நடுப்பகுதியில் வரும் சித்திரை மாத பிறப்புடன் ஆரம்பமாகும் நமது வருடப்பிறப்பு நாளிலேயே சிங்கள பௌத்தர்களும் தமது வருடப்பிறப்பைக் கொண்டாடுகின்றர்.

எந்த ஒன்றுக்கும் ஒரு தொடக்கம் உண்டு அந்த ஆரம்ப தினம் கொண்டாட்டத்திற்குரியதாகக் கொண்டாடப்படுவது வழக்கம். நமது பிறந்ததினத்தை வருடம் தோறும் கொண்டாடுகின்றோம். பெரியோர்களின் ஜயந்தி தினங்களைக் கொண்டாடுகின்றோம். இவ்வாறே வருடப்பிறப்பையும் கோலாகலமாகக் கொண்டாடுவது நமது பாரம்பரிய வழக்கமாகவுள்ளது. பிரம்மா உலகத்தை படைக்கத் தொடங்கியதும் சித்திரை புதுவருட நன்நாளிலே தான் என்ற ஒரு புராண ஐதீகம் உள்ளது.

## புதுமலர்ச்சி

"நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் நடப்பவை நல்லவையாக அமையட்டும்" என்றொரு வாக்கியத்தைப் பலரும் சொல்லக் கேட்டிருக்கின்றோம். இத்தகைய மனோபாவத்தை வளர்த்து நமது துன்ப, துயரங்கள், கஷ்டநஷ்டங்கள், கோபதாபங்கள் யாவற்றையும் பழையன என்று நீக்கி புத்தம்புதிய நம்பிக்கையும் புது மலர்ச்சியும் தோன்ற நமது வாழ்க்கையைச் சீர் படுத்திக்கொள்ளலாம். இந்த நல்லெண்ணத்தையும் இப்புத்தாண்டு தோற்றுகின்றது.

எம்மிடம் எப்படியோ உண்டாகிவிட்ட தீய பழக்கங்களை இன்றுடன் களைந்து விடுவோம், என்கின்ற புதுவருட பிரதிக்ஞைகளை உருவாக்க முடிகின்றது.

அதிகாலையில் எழுந்து மருத்து நீர் தேய்த்து புத்தாடைகளை அணிந்து ஆலயத்துக்குச் சென்றும், இல்லத்திலே தீபம் ஏற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவழிபாடு செய்து இத்தினத்தினை மங்கள மாக ஆரம்பிக்கின்றோம். அதற்கேற்ற வகையில் முன்கூட்டியே வீடுவாசலையும் முற்றத்தையும் கூட்டிக் கழுவி துப்பரவு செய்து மாக்கோலங்க ளாலும் மாவிலைகளாலும், மலர்களாலும் அலங்கரித்துக் கொள்வது வழக்கம். சிலர் சூரியப்பொங்கல் பொங்குவதும் உண்டு.

மருத்து நீர் என்பது பலவகையான இலைகள், மலர்கள், அறுகு, பால், மஞ்சள், வாசனைத்திரவியங்கள் முதலியவற்றை நீரிலிட்டு அவித்துக்கொள்வதாகும். இது விசேஷ மருத் துவச் சிறப்பும், தோஷங்கள் பலவற்றை நீக்கும் தன்மையும் கொண்டதாகும்.

இத்தினத்திலும் அடுத்துவரும் நல்ல நாட்களிலும் நண்பர்கள், உறவினர்கள், வீடு களுக்குச் சென்று உறவாடி மகிழ்தல், அவர் களை நமது வீடுகளுக்கு அழைத்து ஒன்றாக விருந்துண்டு மகிழ்தல், விதவிதமான பட்சணங் களை தயாரித்தும், அறுசுவையுண்டி சமைத்துண் டும் இந்தப் புதிய நன்நாளின் மகிழ்ச்சியை நிறைவாக அனுபவிப்பது வழக்கம்.

குருமார், ஆசிரியர்கள், பெரியோர்களைச் சென்று தரிசித்து ஆசிபெறுதலும், கைவிசேஷம் பெறு தலும், புத்தாண்டின் முக்கிய அம்சமாக கருதப் படுகின்றது.

முக்கியமாகப் பெற்றோரை வணங்கி அவர்களிடம் ஆசீர்வாதமும், கைவிசேஷமும் பெண்கள் தம் கணவரை வணங்கி கைவிசேஷ மும் பெறுவதும் பெருவழக்கு. குரு, ராஜா, பிரபு தர்ஷனம், கைவிசேஷம் என்பனவற்றுக்கான நல்லநாள், நல்ல நேரங்களை பஞ்சாங்கங் களில் குறித்து வைத்திருப்பர், ஆனால் அவை புதுவருட நாளுக்குப் பிறகு தினங்கள் தள்ளி யும் வருகின்ற காரணத்தால் நாள் பார்க் காமல் புதுவருட தினத்திலேயே பலர் இவற்றை நடை முறைப்படுத்துவதும் உண்டு.

## நற்கருமங்கள்

புத்தாண்டு பிறந்த பின் நாள் வேலை, நாள் வியாபாரம், புதுக்கணக்கு பதிதல், ஏர்மங்கலம், புதுவிதைப்பு, புதிரெடுத்தல், வித்தியாரம்பம் என்று நற்கருமங்களை நல்முகூர்த்தம் பார்த்து பார்த்து மங்களகரமாக ஆரம்பிக்கும் வழக்கம் தமிழரிடையே உண்டு.

புத்தாண்டு தினத்தின் மாலைப்பொழுது போர்த்தேங்காய் அடித்தல் என்னும் நல்லதொரு விளையாட்டில் கழிவது முற்கால வழக்கம். இன்று இவ்விளையாட்டு வழக்கொழிந்து போவ தைக் காணலாம்.

ஆடி தொடங்கி வயலில் உழைத்து பெற்ற பலனைக்கார்த்திகையிலும் மார்கழியிலும் கைகொண்டு, பின் தையில் பெற்றதை மற்ற வருக்கும் பங்கிட்டு பொங்கலிட்டு பொங்கல் ஆற்றி, பனிவாடையும், குளிரும் நீங்க இரண்டு திங்கள் இருந்து பின்தோன்றும் இந்த வேனில் நாளை என்று வரும், என்று வரும் என்று என்று தமிழன் காத்திருப்பான். எங்கோ இருந்த சுந்தரமூர்த்தி நாயனாரை இச் சித்திரை விழா தானே திருவாரூருக்கு ஓடச் செய்தது என்று கருதப்படுகின்றது.

"தென்றல் மணங்கமழும் தென் திருவாரூர் புக்கு

என்றன் மணங்குளிர என்று கொள் எய்துவதோ" எனசுந்தரர் இத்தென்றல் தவழும் சித்திரை நாளையே எண்ணிப் பாடுகின்றார். என நம்பப்படுகின்றது.


மங்கையர்

மனங்கவரும்

தரமான தங்க

நகைகளுக்கு

என்றும் நாடுங்கள்

**அச்சுதா ஜுவலர்ஸ்**

40, 3ஆம் குறுக்குத் தெரு,

திருக்கோணமலை.

☎ 026-22647


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ நாடகம்!

கயிலை மலையில் சிவபெருமானை வணங்க விரைகிறார் பிரமதேவர்.

வாயிற்புறத்தில் விளையாடிக் கொண் டிருக்கும் முருகனைப் பார்த்தும் பார்க்காமல் உள்ளே செல்கிறார்.

என்ன! சின்னப்பையன்! அலட்சியப்பார் வையை வீசி விட்டு உள்ளே விரைந்த நான் முகனை ஆறுமுகம் அழைப்பதாகப் பூதகணம் சொல்கிறது.

உள்ளுக்குள் உதறல். வெளியே தெரியா மல் அடக்கிக்கொண்டு முருகனிடம் வருகிறார். வேண்டா வெறுப்பாக ஒரு கும்பிடு.

"நீர் யார்? முருகன் கேட்கிறார்.

"பெருமானே! உமது அடிமை" என்று சொல்லியிருக்க வேண்டும்.

"நான் படைப்புக்கடவுள் பிரமதேவர்"என் கிறார் அயன்.

"எதைக்கொண்டு படைக்கிறீர்? இது முருகன் கேள்வி.

"உமது திருவருளைக் கொண்டு" என்று சொல்லியிருக்க வேண்டும்.

"வேதத்தைக் கொண்டு" என்கிறார் விதி.

"வேதம் தெரியுமா? - மீண்டும் முருகன்.

"சகல ஆன்மாக்களுக்கும் எம்பிரானே நீ உணர்த்த உணர்கின்றன! நான் விதி விலக் கல்லவே" என்று சொல்லயிருக்க வேண்டும்.

"நான் எழுதியது எனக்குத் தெரியாதா?" என்கிறார் கலைமகள் காந்தன்.

முருகன்: "ஒரு ரிக் சொல்லும் பார்ப்போம்"

இந்தச் சின்னப்பயல் என்ன அதிகாரம் பண்ணுகிறான்?" என்று மனதுக்குள் மறுகுகிறார் பிரமன். பெரிய இடத்துப் பையன் என்ன செய்வது?."

"ஓம் அக்கினி மீடே" என்று ஆரம்பிக் கிறார் பிரமன்.

"நிறுத்தும்" முருகன் உரக்கக் கட்டளை யிட்டார். பயந்து நிறுத்தினார் பத்மாசனர்.

"ஓம் என்று தொடங்கினீரே அது என்ன? அதன் பொருள் என்ன?

பிரமன்: "அதுவா! அதுவந்து! பிரணவம் அது வந்து வ ந்து..............." தொடர்ந்து ஏதோ விளக்கம் கூற முற்படலானார். அவர் அறிவுக்குத் தோன்றிய உண்மை அனுபவத்திற்கு வராத காரணத்தினால் சொற்கள் குழறின. தடுமாற்றம், அச்சம்.

"பிரணவத்துக்குப் பொருள் தெரியாமல் நீர் எதற்குப் படைப்புத் தொழிலை வைத்துக் கொண்டிருக்கிறீர்? இனி நாமே அந்தத் தொழிலை மேற்கொள்வோம்." என்று சீறினார் முருகன்.

வெலவெலத்துப் போனார் விதி.

முருகன் இறங்கி வந்தார். நான்முகனைக் கீழேதள்ளி நாலு தலையிலும் குட்டினார். இவரைச் சிறையிலிடுங்கள் என்று உத்தரவிட்டுப் படைப்புத்தொழிலை தாமே பார்க்கத் தொடங்கி னார்.

சிவபரஞ்சுடரின் திருச்செவிக்கு குமாரக் கடவுளின் விளையாட்டுச் செய்திகள் எட்டின மைந்தனை அழைத்தார் மகேசன்.

"செல்வா! பெரியவர்களை அவமதிக்க லாமா? பிரமதேவரைச் சிறையில் அடைத்து விட்டாயாமே"

"தந்தையே! அரைகுறைகளை எல்லாம் தாங்கள் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றீர்கள் அவருக்குப் பிரணவத்துக்கே பொருள் தெரிய வில்லை. எப்படித் தம்தொழிலை உருப்படியாகச் செய்வார்?" என்கிறார் இளங்குமரன்

"மைந்தா! பிரணவத்துக்குப் பொருள் தெரியவில்லை என்று அவர்மேல் குற்றம் சுமத் தும் முன் உனக்கு அது நன்றாகத் தெரியும் என்ற உறுதி உனக்கு உண்டா?"

"தெரியாமல் இப்படிச் செய்வேனா?"

"அப்படியானால் சொல் "

"கேட்கிறபடி கேட்டால் சொல்கிறபடி சொல்வேன்". சிவபிரான் மகிழ்ந்தார் புன்முறுவல் முகத்தில் அரும்பத் தம் காலை மடித்தார். மண்டியிட்டார். செல்வக் குமரனைத் தோளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்தினார். நாக ஆபரணத்தையும் மேலாடையையும் கீழே விழாது சுருட்டினார்.

கைகள் கூப்பித் தலைவணங்கிச் செவி சாய்த்து, "மைந்தா! பிரணவத்தின் பொருளைச் சொல்" என்றார்.

குபு குபுவென அமிர்தகங்கை வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது போல் ஈசனார் காதில் தெரிவரிய பழமறைகள் புகலும் ஒரு திருமொழியின் உரைவிரிய உறுபொருளைச் சொல்கிறார் குமரக்கடவுள்!

தம்மையே தமக்குணர்த்தும் மேலாய தத்துவத்தைத் தனயர் சொல்லக் கேட்டு, மகிழ்ச்சி துளும்பிய மகேசர் தம்மழலைச் செல்வத்தை வாழ்த்தினார்.

அருகே இருந்த அன்னை கௌரி இந்தத் திருவிளையாடலைக் கண்டு களிகொண்டாள். இறைவன் கருணையால் பிரமதேவர் விடுதலை பெற்றார்.

சிவமூர்த்தியின் பணிவு, தம்மைந்தன் என்றாலும் குரு என்கிற நிலையில் அவனைத் தமக்கு மேலாகக் கொண்டாடும் பெருந்தன்மை மிளிரும் தோற்றம்.

பக்கத்தில் கையைக்கட்டிக் கொண்டு நல்ல அப்பா! நல்ல பிள்ளை! என்று புன்முறுவலிக்கிறாள் அம்பிகை.

"சக்தி" 1995 தீபாவளி மலரிலிருந்து

முருகனது ↑ ஞானசக்தி

ஞானம் என்றால் அறிவு.

அறிவுக்கு மூன்று இலட்சணங்கள் உண்டு. அவையாவன ஆழம், அகலம், கூர்மை.

வேலின் அடிப்பகுதி ஆழ்ந்தும் இடைப்பகுதி அகன்றும் நுனிப்பகுதி கூர்மையாகவும் இருக்கிறது.

வேல் என்பது முருகனின் ஞானசக்தி. வேல் என்றால் எல்லவற்றையும் வெல்வது என்பது பொருள்.

ஞானம் ஒன்றே எல்லாவற்றையும் வெல்லக் கூடியது.

இந்திரன் முதலான வானவரைச் சிறையிலிருந்து மீட்பதற்கு முருகனது வேற்படை எழுந்தது.

ஆணவத்தையும் தீவினையையும் ஞானம் தவிர வேறு எதனாலும் அழிக்க முடியாது.

- 'முருகதரிசனம்' நூலிலிருந்து -

## சக்தி வழிபாடு

இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும் தோழனாகவும் தலைவனாகவும் வழிபடும் மரபு சைவ சமயத்தில் உண்டு.

இவற்றுள் தாயாக இறைவனை வழிபடும் முறையே சிறந்தது.

அன்பு, பொறுமை, தூய்மை, தன்னலமின்மை, மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவள் தாய்.

"இதனாலேயே "பால்" நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ என்றும்.

தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" என்றும் சைவ நன்மக்கள் பாடியிருக்கின்றார்கள்.

இறைவனைத் தாயாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும்.

இப்பூவுலகமே சக்தி வடிவானது. சக்தியின் ஆற்றலால் இயங்குகின்றது.

உலகின் சக்திகளுக்கு எல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள் அன்னை பராசக்தி.

இச்சக்தியையே வீரத்தைத் தரும் துர்க்கையாகவும் கல்வியைத்தரும் கலைமகளாகவும், செல்வத்தைத்தரும் திருமகளாகவும் சைவ மக்கள் வழிபடுகின்றார்கள்.

### பராசக்தி

அம்பிகை, அம்பாள், பவானி, உமை, சாமுண்டி பகவதி, காளி, உருத்திராணி ஆகியன அன்னை பராசக்திக்கு வழங்கும் பிறபெயர்களாகும்.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்பது சைவசித்தாந்தக் கருத்து. எனவே, சிவபக்தர்கள் சிவவழிபாட்டுடன் சக்தி வழிபாட்டிற்கும் தமது சமய வாழ்வில் முக்கிய இடமளித்துள்ளனர்.

சக்திக்குத் தனியாக சந்நிதானம் அமைத்து வழிபடுவதும், ஊர்கள் தோறும் அம்பாளுக்குத் தனியே கோவிலெடுத்து வழிபடுவதும் சைவசமய மரபாகும்.

ஈழத்திலும் அம்பாளுக்கென தனியான கோயில்கள் உள்ளன.

திருக்கோணமலையிலுள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஈழத்தில் சைவ மக்களின் நெஞ்சங்களில் உன்னத ஸ்தானம் வகிக்கிறது.

ஈழத்தில் உள்ள சக்திபீடங்களில் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் அருட்சக்தி நிறைந்ததாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையன் உடலில் புகுந்து "திருமந்திரம்" அருளிய சிவயோகி

திருக்கைலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலின் முதற்பெருநாயகர் திருநந்திதேவர்.

இவரின் திருவருள் பெற்ற சிவயோகிகள் பலர் உண்டு. அவர்களில் ஒருவர் சுந்தரநாதர் என்ற சிவயோகி.

சுந்தரநாதர் பொதிகைமலையில் வாழ்ந்து வந்த, தமிழ் வளர்த்த அகத்திய மாமுனிவரின் நண்பர்.

அந்த நட்பின் காரணமாக, அகத்திய மாமுனிவருடன் சில காலம் தங்கியிருக்க அவாக் கொண்டார்.

இதற்காக பொதிகை மலை நோக்கி சுந்தரநாதர் பயணமானார்.

வழியில் திருக்கேதாரம், பசுபதி நேபாளம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவதிகை, சிதம்பரம் என்னும் தலங்களுக்குச் சென்றார்.

இறுதியில் அவர் திருவாவடுதுறையை அடைந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருந்தார்.

நாயன்மார்கள் வரலாறு

## பசுக்கள் கூட்டம்

ஒருநாள், அந்திமயங்கும் நேரம்....

காவிரியாற்றங் கரையில் உள்ள வனத்தில் பசுக்கள் கூட்டம் ஒன்று அழுது கொண்டிருந்ததை அவர் கண்டார்.

சாத்தனூரில் இருக்கின்ற இடையன் அப்பசுக்களை மேய்க்கின்றவன். அவன் பெயர் மூலன். அவனின் சடலத்தைச்சுற்றி பசுக்கள் அழுது கொண்டிருந்தன.

சுந்தரநாதருக்கு அப்பசுக்கள்பால் கருணை சுரந்தது. இவ்வாயற்ற ஜீவன்களின் துயரம் போக்கத் தீர்மானித்தார். இடையன் உயிர்த்தெழுந்தால்தான் பசுக்களின் துயரைப் போக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

தனது சித்த சக்தியால், பிராகிமிய சித்தி முறையில் தனது உயிரை, இடையனுடைய உடலிலே பிரவேசிக்கச் செய்து திருமூலராய் எழுந்தார். தனது உடலை ஓரிடத்தில் மறைத்து வைத்தார்.

இடையன் உயிர்பெற்றெழுந்ததைக் கண்ட பசுக்கள் அவனை நக்கி மோந்து, கனைத்து, மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளி, பின்பு போய் மேய்ந்தன.

திருமூலநாயனார் மனமகிழ்வு கொண்டார். பசுக்கள் மேயும் வழிச்சென்று, காவிரியில் நீருட்டி சாத்தனூரை நோக்கித் திரும்பினார்.

வழக்கமாக அந்தி சாய்கையில் வீடு திரும்பிவிடும் கணவனைக் காணாது வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள் இடையனின் மனைவி.

இடையனைக் கண்டதும் மனைவி மகிழ்ந்தாள். இடையனான மூலனின் உருவில் சிவயோகி சுந்தரநாதர் வந்து கொண்டிருப்பது அவளுக்குத் தெரியாது.

"ஏன் இவ்வளவு தாமதம்?" - என்று கேட்டு, இடையனின் கையைப் பிடித்தாள் மனைவி.

## மடத்தில் தியானம்

ஆனால் இடையனின் உருவில் வந்த சிவயோகி சித்தம்பதற "என்னைத் தொடாதே" என்று கூறி எட்ட நின்றார்.

மனைவி "என்ன கூறுகிறீர்கள்" என்று கேட்டாள்.

"உனக்கு என்னோடு யாதொரு சம்பந்தமும் இல்லை"- என்று திருமூல நாயனார் அப்பெண்ணிடம் கூறிவிட்டு, ஒரு மடத்திநுள்ளே புகுந்து யோக நிஷ்டையில் ஆழ்ந்தார்.

உண்மை என்னவென்று உணராத அப்பெண், கணவனுக்கு என்ன நடந்தது என்று கவலைப் பட்டாள்.

ஊரில் உள்ள பெரியவர்களை அணுகி, கணவனில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைத் தெரியப் படுத்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்கள் மடத்துக்குச் சென்று நிஷ்டையிலிருந்த திருமூலரைக் கண்டனர்.

"இவர் சித்தம் கலங்கியவரல்லர்: பந்த பாசங்களைத் துறந்தவர்" - என்பது ஊர்ப் பெரியவர்களுக்குப் புரிந்தது.

இடையனின் மனைவியைத் தேற்றினர். அவளுக்குச் சித்தம் கலங்கி விட்டது.

## இறைவன் திருவிளையாடல்

சாத்தனூர் மடத்திலிருந்த திருமூலர் அங்கிருந்து புறப்பட்டு, காவிரியாற்றங்கரைக்குச் சென்றார். அங்கு தான் மறைத்து வைத்துவிட்டு வந்த தன்னுடைய உடலைத் தேடினார். உடல் கிடைக்கவில்லை.

சைவாகமங்களிலே உள்ள மெய்ப் பொருளை தமிழ் மொழியில் நூலாக வெளியிடும் பொருட்டு இறைவன் தனது உடலை மறைத்தருளினார் என்பதை திதருமூலநாயனார் ஞான உணர்வினால் அறிந்து கொண்டார்.

பின்னர் திருமூல நாயனார் திருவாவடுதுறையை அடைந்து அங்குள்ள சிவாலயத்தில் மேற்குப்பக்கத்தில் உள்ள அரச மரத்தின் கீழ் போய் யோக நிஷ்டையில் அமர்ந்தார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் விரித்துக்காட்டும் திருமந்திரத்தை ஆண்டுக்கு ஒரு மந்திரமாக திருமூல நாயனார் பாடத் தொடங்கினார்.

ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களையும், மூவாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து பாடி முடித்தார். பின்னர் திருக்கைலாசம் அடைந்தார்.

வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துச் சாரங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டியாக திருமூல நாயனார் அருளிய திருமந்திரம் இன்றும் விளங்குகிறது.

## சஞ்சிகைக் குழு

★ திரு. சி. குருநாதன் - ஆசிரியர்
★ திரு. க. சவுந்தரராசா - துணை ஆசிரியர்
★ திரு. வ. தங்கராசா
★ திரு. கு. கோணாமலை
★ திரு. செ. சிவபாதசுந்தரம்
★ திரு. க. கனகசபாபதி
★ திரு. சி. சிவதாஸன் (விநியோகப் பொறுப்பாளர்)

## உன்துணை வேண்டி நிற்பேன்

தொல்லைகள் தொடர்ந்து வந்தால்
தொலைத்திட வழியைத் தேடின்
வல்லவன் பாதம் அல்லால்
வழித்துணை வேறும் உண்டோ!

★

நல்லதை எண்ணி வாழ்ந்தேன்
நலம்பல புரிந்து வாழ்ந்தேன்
பொல்லாமை நினைப்பே இல்லை
பொறாமையோ துளியும் இல்லை!

★

நல்லதோர் வாழ்வு வேண்டி
வணக்கம் நான் செய்வதில்லை
அல்லல்கள் நீங்கக் கேட்பேன்
அனைவர்க்கும் அருளைக் கேட்பேன்.

★

சொல்லொணாத் துன்பம் என்மேல்
தொடர்கதை ஆவதேனோ?
வல்லவா எல்லாம் உந்தன்
வளம் தரும் சோதனையோ.

★

என்னதான் வந்த போதும்
எனக்கேதும் துணைகள் இல்லை
உன்னையே இறைஞ்சுகின்றேன்
உன்துணை வேண்டி நிற்பேன்.

கு. கோ

## காளிதேவியின் மந்திர நாமம்

தேவியின் நாமத்தை அனுதினமும் ஓதுபவரைத் துன்பங்கள் அனுகா.

'ஓம் ஸ்ரீ காளிகாயை நம:' எனும் மந்திரம் மகா சக்தி வாய்ந்தது. இம்மந்திரத்தைப் பய பக்தியோடு நாளும் பொழுதும் ஓதிவரின் பேராபத்துக்களினின்றும் விடுபடுவர்.

மந்திரத்தை ஓதி நீறு அணியுங்கள். எல்லாக் காரியங்களும் ஜெயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் பாபவிமோசனம் பெற்ற திருத்தலம்

சிவபெருமான் பாபவிமோசனம் பெற்ற தலம் ஒன்று உண்டு.

பிரம்மதேவனுக்கு ஐந்து தலைகள் இருப்பதைக் கண்டார் சிவபெருமான்.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என நான்கு திசைகளுக்கும் நான்கு தலைகள் போதும் ஐந்தாவது தலை எதற்கு என்று கோபாவேசத்துடன் சிவபெருமான் கேட்டார்.

கேட்டதுடன் நிற்கவில்லை. ஐந்தாவது தலையைக் கிள்ளி எறிந்து விட்டார்.

பிரமதேவர் நான்முகனாகி விட்டார்.

ஆனால் கிள்ளி எறிந்த ஐந்தாவது தலை சிவபெருமானின் கையை விட்டு அகலாமல் அவர் கையிலே கபாலமாய் மாறி ஒட்டிக் கொண்டு விடுகிறது.

ஆத்திரமடைந்த பிரமதேவர் சாபமிடுகிறார்.

இடப்படுகின்ற பிட்சை மூலம் கபாலம் எப்போது நிரம்புகிறதோ அப்போதுதான் அந்தக் கபாலம் சிவபெருமானின் கையை விட்டு நீங்கும் இதுவே பிரமதேவன் இட்டசாபம்.

இச்சாபத்தின் மூலம் சனி ஈஸ்வரன் பட்டத்தைப் பெற்று விட விரும்பி, சிவபெருமானைப் பிடித்துக் கொள்கிறார். இதனால் சிவனுக்குப் பிரமஹத்தி தோஷம் ஏற்படுகிறது. சிவன் பிட்சாண்டியாகிறார்.

பிட்சாண்டியான சிவன் பிரமஹத்தி தோஷம் நீங்க பல புண்ணிய தலங்களுக்குச் சென்று புண்ணிய தீர்த்தங்களில் நீராடுகிறார்.

எனினும் அவர் கையில் ஒட்டிக்கொண்ட கபாலம் பிட்சையால் நிறையவில்லை.

சிவன் மனவேதனையோடு உத்தமர் கோயிலுக்கு வருகிறார். இங்கு மஹாலட்சுமி தனது திருக்கரத்தால் பிட்சையிட அதுவரை நிரம்பாத அந்தக் கபாலம் அன்று நிரம்பி வழிந்தது. கபாலமும் சிவனின் கையை விட்டு அகன்றது. சிவனைப் பிடித்த பிரமஹத்தி தோஷமும் நிவர்த்தி ஆகிறது.

சிவன் பாபவிமோசனம் பெற்ற உத்தமர் கோயில், திருச்சியிலிருந்து சென்னைக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது.

திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் பெற்ற தலம் இது.

இந்த ஆலயத்துக்கு இன்னொரு சிறப்பு. ஆக்கல், காத்தல், அழித்தல் என முத்தொழில்களுக்குரிய தெய்வங்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் அங்கு சேர்ந்திருக்கின்றனர்.

மும்மூர்த்திகளின் ஷேத்திரம் என இத்தலம் அழைக்கப்படுகிறது.

கதம்ப மகரிஷியின் கடுந்தவத்துக்கு இரங்கி அவருக்குக் காட்சியளிக்க வேண்டி இவ்வாலயத்தில் எழுந்தருளியதால் இப்பேர் வந்தது என்று சொல்லப்படுகிறது.

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனுக்கு பிட்சாடன மூர்த்தி என்றும்-

பெருமாளுக்கு புருஷோத்தமர் என்றும் அன்னைக்குப் பூரணவல்லி என்றும் பெயர்.

திருமாலும் திருமகளும் அழிவில்லாமல் சகல உயிர்களையும் காப்பாற்றி வருவதால், எம் பெருமானுக்கு உத்தமர் என்று பெயர் வந்தது. இதனால் இத்தலத்துக்கு உத்தமர் கோயில் என்ற பெயர் ஏற்பட்டது.

இவ்வாலயத்தில் பிரமாவுக்கும் சரஸ்வதிக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன.

### அபிராமி அந்தாதி

வந்திப் பவருன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின்
தண்ணளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி

சிவபெருமானுக்குரிய விரதங்களுள் சிவராத்திரி விரதம் பெருஞ்சிறப்புடையது. இது மாசி மாதத்தில் வரும் தேய்பிறைக் காலத்துப் பதினான்காம் நாள் இரவாகும்.

சிவராத்திரி நாளில் உபவாசமிருந்து நான்கு யாம மும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் உத்தமம். இது செய்ய முடியாதவர் ஒருவேளை நீரேனும் பாலேனும் பருகுதல் மத்திமம். சிவபூசை இல்லாதவர் நித்திரையின்றி ஸ்ரீபஞ்சாட்சர ஜபமும் சிவபுராண சிரவணமும் செய்து நான்கு யாமமும் சிவாலய தரிசனஞ் செய்தல் வேண்டும். வில்வ இதழால் சிவபெருமானை அர்ச்சித்தல் பேரன்புக்கு அடையாளமாகும்.

## லிங்கோற்பவ காலம்

சிவராத்திரி வேளையில் நள்ளிரவில் ஒரு முகூர்த்த நேரம் லிங்கோற்பவ காலம் எனப்படும். அவ்வேளை மிகவும் புனிதமானது.

நான்கு யாமமும் நித்திரையொழிக்க இயலாதவர் லிங்கோற்பவ முகூர்த்தத்திலாவது நித்திரையொழித்துச் சிவாலய தரிசனஞ் செய்து வழிபடல் வேண்டும். இது அவசியமானது. இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்தால் வேள்வி செய்த பலன் கிடைக்கும்.

## சிவராத்திரியின் வரலாறு

முன்னொரு நாள்.........

பிரமதேவரும் திருமாலும் தம்முள் யார் பெரியவர் என்பதையறியவாது செய்து கலகஞ் செய்தனர்.

அவர்களுக்கு நல்லறிவுண்டாக்கி அருள் செய்ய சிவபெருமான் தீர்மானித்தார். அவர்கள் மத்தியில் அடியும் முடியும் அறியமுடியாதவகையில் ஓர் அக்கினிப் பிழம்பாக சிவபெருமான் தோன்றினார்.

திருமாலும் பிரமனும் அக்கினிப்பிழம்பைக் கண்டு மலைத்துப்போய் நின்றனர். அதன் அடி எது முடி எது என்று அறியாது அவர்கள் திகைத்தனர்.

## அசரீரி

அந்த நேரம் ஓர் அசரீரி கேட்டது.

அதன் அடியையும் முடியையும் அறியுங்கள் - அவ்வாறு அசரீரி சொன்னது.

பிரமதேவன் அன்னப்பறவை வடிவெடுத்து ஆகாய மார்க்கப் பறந்து முடியைத் தேடப் புறப்பட்டார். அவர் வானவெளிக்கு அப்பாலும் சென்றார். முடியைக் காணவே முடியவில்லை.

இன்னொரு பக்கத்தில் திருமால் பன்றி உருவெடுத்து பூமியைத் தோண்டிப்பாதாளம் வரை சென்றார். அவரால் அக்கினிப்பிழம்பின் அடியைக் காண முடியவில்லை.

இறுதியில் பிரமனும் திருமாலும் வெகுவாகக் களைத்து, இறைவனை நினைந்து "போற்றி போற்றி" என்று அடங்கி நின்றனர்.

அவ்வேளை சிவபெருமான் தமது ஒளி உருவத்தைச் சுருக்கிச் சிவலிங்கத் திருவுருவமாகக் காட்சியளித்தருளினார்.

இங்ஙனம் ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதி லிங்கமாக வெளிவந்து, லாவண்ய ரூபத்தை அடைந்த புண்ணிய இரவே சிவராத்திரியாகும்.

இரவில் ஐம்புலன்களும் மனத்தில் ஒடுங்க, மனம் ஜீவனில் ஒடுங்க, ஜீவன் நம் உடலில் தூங்காமல், உண்ணாமல், ஸ்வயம் பிரகாசமாகவுள்ள ஸ்வரூபத்தில் அடைக்கலமாகிறது. இப்படி எல்லா ஜீவராசிகளும் அடைக்கலமாகும் ஈசுவரனுடைய புண்ணியத் திருநாளே சிவராத்திரி.

## மனிதனின் சொத்து

மலர்ந்த முகம்
மகிழ்ந்த மனம்
கனிந்த பேச்சு

இவையெல்லாம் மனிதனுக்குத் தானாகவே இருக்க வேண்டிய, இருந்து கொண்டிருக்கிற சொத்து. இவற்றை அவன்அடிக்கடி அனுபவிக்க வேண்டாமா? ஆகையினால்தான் இவற்றைச் சொத்து என்று நாம் சொல்கிறோம்.

பலருக்கு எல்லா நேரங்களிலேயும் இந்தக் குணங்கள், தன்மைகள் வரா. பரவாயில்லை. ஏதேனும் சில நேரங்களிலாவது இந்தக் குணங்களை அவன் வெளிப்படுத்த வேண்டும். இல்லையென்றால் மனிதப் பிறவியில் சேர்ந்தவன் என்று அவன் கருதப்படமாட்டான்.

ஆகவே மனிதனுக்கு இருக்கக்கூடியகுணங்கள் எல்லாம் இருந்தால்தான் அவனுக்கு மனிதன் என்று பெயர். மனித குணங்கள் இல்லாமல் மனித உருவத்தோடு உலவிக் கொண்டு இருக்கும்போதுதான் அவனைப்பார்த்து மிருகத்தின் பெயரை வைத்துக் கூப்பிடுகிறார்கள்.

"அதோ போகிறானே அவன் ஒரு நரி" என்று சொல்கிறார்கள். அவன் அம்மா ஒரு நரியையா பெற்றாள்? இல்லை. தோற்றத்திலே அவன் மனிதன். குணத்திலே அவன் நரி.

ஆகையினால்தான் திருவள்ளுவர் போன்ற ஞானிகள் மனிதனுக்கு உயர்ந்த குணங்கள் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மனிதன் உயர்ந்த பிறவி எடுத்தவன். மனிதன் எப்போதும் தனித்து வாழக் கூடாது. கலந்து பலரோடு சேர்ந்து வாழவேண்டும்.

நன்றி : "சக்தி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அருளுரைகளிலிருந்து**

## மல்லிகையும் மனிதனும்

மல்லிகைச் செடி வளர்கிறது. அச்செடி வளர்கின்ற நிலத்துக்கு மணமில்லை. செடிவளர ஊற்றப்படும் தண்ணீருக்கு மணமில்லை. இலைக்கு மணமில்லை. தண்டுக்கு மணமில்லை. இருந்தும் அதன் மலர் நறுமணம் வீசுகிறது.

ஆனால் மனிதன் நறுமணத்தின் மத்தியில் வாழ்கின்றான். அவன் பாவிக்கும் சோப்பு மணம் வீசுகிறது. உணவிலே மணம் வீசுகிறது. உடுக்கும் உடையில் வாசனை. நெற்றியிலே பூசும் திருநீறு கூட வாசனை உடையதாக இருப்பதைத் தான் அவன் விரும்புகிறான்.

ஆனால் அவன் உள்ளம் அருள்மணம் வீசத் தவறுகின்றது.

மல்லிகைச் செடி போன்று மனிதன் வாழ வேண்டும்.

## இறைவனின் அஞ்சல்பெட்டி

தபால் திணைக்களம் நாடு எங்கும் அஞ்சல் பெட்டிகளை நிறுவியுள்ளது. அவற்றில் போடப்படும் தபால்கள்தான் உரிய இடங்களுக்குப் போய்ச்சேருகின்றன.

நான் பணக்காரன் வெள்ளியினால் ஒரு பெட்டியைச் செய்து, அதில்தான் தபாலைப் போடுவேன்" என்று சொல்லி அப்படி ஒரு பெட்டியில் தபாலைப் போட்டால் அது உரிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விடுமா? சேராது.

அதுபோல இந்த நாட்டில் வாழும் ஏழைகள் தான் இறைவனின் அஞ்சல் பெட்டிகள். அந்தப்பெட்டிகளிலே தான் செல்வந்தர்கள் தங்கள் பணத்தைப் போட வேண்டும். அப்போதுதான் உரிய பலன் மறுபிறப்பிற் கிட்டும்.

செல்வர்களின் வீடுகளில் இருக்கும் பணம் ஏழைகளின் துயர்போக்கவே பயன்பட வேண்டும்.

ஏழை ஒருவனின் வருத்தத்தை அறிந்து கண்ணீர் விட முடியாதவனால் ஆலயம் சென்று எப்படிக் கண்ணீர் விட்டு இறைவனை வழிபட முடியும்?

இதைத்தான் "இரப்பவர்க்கு ஈகை வைத்தான் ஈபவர்க்கு அருளும் வைத்தான், கரப்பார்க்குக் கடும்நரகம் வைத்தான்" என்று பாடியிருக்கிறார்கள்.

## நடமாடும் தெய்வங்கள்

ஒரு நிலக்கிழார் பழனியாண்டவர் சந்நிதிக்கு வாழைப்பழக்குலை ஒன்றைத் தனது வேலைக்காரன் மூலமாகக் கொடுத்தனுப்பினார்.

மூன்று மைல்கள் வாழைப்பழக் குலையைத் தூக்கிக் கொண்டு செல்லவேண்டிய வேலைக்காரனுக்கு இடைவழியில் பசியாறுவதற்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட நிலக்கிழார் தவறிவிட்டார்.

இந்த நிலையில் வாழைக்குலையைத் தூக்கிக் கொண்டு சென்ற வேலைக்காரனுக்கு இடைவழியில் பசி ஏற்பட்டது.

பசியா, பழனியாண்டவனா பெரிது என்ற நிலைக்கு வேலைக்காரன் தள்ளப்பட்டான். பசிதான் அவனை வென்றது.

தலைமேல் வைத்துக் கொண்டு போன வாழைப் பழக்குலையை வேலைக்காரன் கீழே இறக்கி வைத்தான். பின்னர் அக்குலையிலிருந்து அவன் நான்கு பழங்களைப் பிடுங்கிச் சாப்பிட்டான்.

பசி தீர்ந்த பின்னர் வேலைக்காரன் வாழைப் பழக்குலையைத் தூக்கிக் கொண்டு பயணத்தை மீண்டும் ஆரம்பித்தான். பழனியாண்டவர் சந்நிதிக்குச் சென்று அர்ச்சகரிடம் வாழைப்பழக் குலையை அவன் ஒப்படைத்தான்.

குலையைப் பெற்றுக் கொண்ட அர்ச்சகர் அதில் நான்கு பழங்கள் பிடுங்கப்பட்டிருப்பதைக் கண்டார். அதனை நிலக்கிழாருக்குக் கடிதம் மூலம் அர்ச்சகர் தெரியப்படுத்தினர்.

கடிதத்தை வாசித்தார் நிலக்கிழார். ஆத்திரம் கொண்டார். வேலைக்காரனைக் கூப்பிட்டு ஏசினார். "பழனியாண்டவருக்கு அனுப்பிய வாழைப் பழக் குலையிலிருந்து நான்கு பழங்களைத் தின்று விட்டாயே" என்று நிலக்கிழார் திட்டினார். வேலைக்காரன் பயந்து ஒளிந்து கொண்டான்.

நிலைமையை அறிந்தார் பழனியாண்டவர். நிலக்கிழாரின் கனவில் தோன்றி "நீ அனுப்பிய வாழைப்பழங்கள் சுவையாக இருந்தன. ஆனால் நான்கு பழங்கள் மட்டும்தான் எனக்குக் கிடைத்தன. ஏனையவை கிடைக்கவில்லை" என்று கூறினார் பழனியாண்டவர்.

நடமாடும் தெய்வங்கள் யார் என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா!

## அருளும் மனிதனும்

கடவுள் தந்த இயற்கையுடன் மனிதன் ஒத்துழைக்கிறான்

கழனிகளைத் தந்தான் கடவுள். மனிதன் அதிலே செந்நெல் பயிரிட்டு ஒத்துழைக்கின்றான். கடலில் கலத்தைச் செலுத்துகிறான்.

இயற்கை வழியில் ஒத்துழைக்கும் மனிதன், இறைவனுடன் அருள்வழியிலும் ஒத்துழைக்க வேண்டும்.

## தொண்டும் மனிதனும்

பஞ்சை நூலாக்கி, பின்னர் துணியாக்கி ஆடையாக்கி அணிகிறான் மனிதன்.

ஈரமான நெல்லைக் காய வைக்கிறான். பின்னர் மீண்டும் ஈரமாக்கிக் காயப் போடுகிறான். பின்பு காய்ந்த நெல்லைக்குற்றி அரிசியாக்குகின்றான். மீண்டும் அரிசியை ஈரமாக்கிச் சோறு ஆக்குகின்றான்.

இதே போன்று மனிதன் தன்னையும் அன்பு என்ற நீரிலே தோய்த்து, தொண்டு என்ற வெய்யிலில் உலர்த்திப் பதப்படுத்தி பக்குவப்படுத்த வேண்டும்.

தொகுப்பு: பிரசாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய குரவர்கள்- சந்தான குரவர்களின் குரு பூசைத் தினங்கள்

## ஓரே பார்வையில்

### தை

மிருகசீரிடம் - கண்ணப்ப நாயனார்
திருவாதிரை - அரிவாட்டாய நாயனார்
உத்திரம் - சண்டேசுர நாயனார்
விசாகம் - திருநீலகண்ட நாயனார்
சதயம் - அப்பூதியடிகள் நாயனார்
ரேவதி - கலிக்கம்ப நாயனார்

### மாசி

அத்தம் - எறிபத்த நாயனார்
பூராடம் - காரி நாயனார்
சதயம் - கோச்செங்கட்சோழ நாயனார்

### பங்குனி

ரோகிணி - நேச நாயனார்
திருவாதிரை - கணநாத நாயனார்
பூசம் - முனையடுவார் நாயனார்
சுவாதி - காரைக்காலம்மையார்
சதயம் - தண்டியடிகள் நாயனார்

### சித்திரை

பரணி - சிறுத்தொண்ட நாயனார்
ரோகிணி - மங்கையர்க்கரசியார்
திருவாதிரை - விறன்மிண்ட நாயனார்
அத்தம் - உமாபதி சிவாசாரியார்
சித்திரை - இசைஞானியார்
சுவாதி - திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
சதயம் - திருநாவுக்கரசு நாயனார்.

### வைகாசி

பரணி - கழற்சிங்க நாயனார்
பூசம் - நமிநந்தியடிகள் நாயனார்
பூசம் - சேக்கிழார் நாயனார்
ஆயிலியம் - சோமாசிமாற நாயனார்
மூலம் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
மூலம் - முருக நாயனார்
மூலம் - திருநீலநக்க நாயனார்
மூலம் - திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

### ஆனி

மகம் - மாணிக்கவாசக சுவாமிகள்
பூரம் - அமர்நீதி நாயனார்
ரேவதி - கலிக்காம நாயனார்.

### ஆடி

கார்த்திகை - மூர்த்தி நாயனார்
கார்த்திகை - புகழ்ச்சோழ நாயனார்
திருவாதிரை - கூற்றுவ நாயனார்
சித்திரை - பெருமிழலைக்குறும்ப நாயனார்
சுவாதி - சுந்தரமூர்த்தி நாயனார்
சுவாதி - சேரமான்பெருமாள் நாயனார்
கேட்டை - கலிய நாயனார்
கேட்டை - கோட்புலி நாயனார்

### ஆவணி

பூசம் - செருத்துணை நாயனார்
ஆயிலியம் - புகழ்த்துணை நாயனார்
ஆயிலியம் - அதிபத்த நாயனார்
மகம் - இளையான்குடிமாற நாயனார்
உத்திரம் - மறைஞானசம்பந்த சிவாசாரியார்
அனுஷம் - குலச்சிறை நாயனார்
மூலம் - குங்குலியக்கலய நாயனார்.

### புரட்டாதி

அச்சுவினி - உருத்திரபசுபதி நாயனார்
ரோகிணி - திருநாளைப்போவார் நாயனார்
பூரம் - அருணந்தி சிவாசாரியார்
சதயம் - நரசிங்கமுனையரைய நாயனார்
உத்தராடம் - ஏனாதிநாத நாயனார்.

### ஐப்பசி

அச்சுவினி - திருமூல நாயனார்
பரணி - நெடுமாற நாயனார்
கார்த்திகை - இடங்கழிநாயனார்
பூசம் - சத்திநாயனார்
சுவாதி - மெய்கண்ட தேவர்
அனுஷம் - பூசலார் நாயனார்
மூலம் - ஐயடிகள்காடவர்கோனாயனார்

### கார்த்திகை

கார்த்திகை - கணம்புல்ல நாயனார்
உத்திரம் - மெய்ப்பொருணாயனார்
அத்தம் - ஆனாய நாயனார்
மூலம் - மூர்க்க நாயனார்
பூராடம் - சிறப்புலி நாயனார்

### மார்கழி

திருவாதிரை - சடைய நாயனார்
உத்திரம் - இயற்பகை நாயனார்
சுவாதி - மானக்கஞ்சாற நாயனார்
பூராடம் - சாக்கிய நாயனார்
ரேவதி - வாயிலார் நாயனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாதத்துக்கு ஏன் இந்த சிறப்பு?

ஒருவருடத்தைப் பன்னிரண்டு மாதங் களாகப் பகுத்து வைத்திருக்கிறார்கள்.

கார்த்திகை, மார்கழி, தை இவ்வாறு அந்த மாதங்களுக்குப் பெயர் சூட்டியும் இருக்கிறார்கள்.

தைமாதமும் பன்னிரண்டு மாதங்களில் ஒரு மாதந்தான். ஆனாலும் தை மாதம் ஒன்றைத் தான் மாதப்பிறப்பு என்று சொல்கிறோம்.

தைமாதம் பிறக்கிற நாளை பொங்கல் திருநாள் என்கின்றோம்.

தைமாதப் பிறப்பைப் புனிதமான மங்கல நாளாகக் கணிக்கிறோம்.

## ஏன் இந்தச் சிறப்பு

தைமாதத்துக்கு மட்டும் ஏன் இவ்வளவு சிறப்பு?

பூமியானது சூரியனைச்சுற்றி வருகிறது. ஒரு சுற்றுச்சுற்ற ஆகும் நேரம் தான் ஒரு வருடம்

சுற்றி வரும் பொழுது சூரியனின் பாரிசத் தில் ஆறுமாதமும் தென் பாரிசத்தில் ஆறு மாத மும் பூமிசுற்றும்.

தென் பகுதியில் சுற்றுகிற காலம் உத்தி ராயணம். வட பகுதியில் சுற்றுகிற காலம் தட்சி ணாயனம் என்று அழைக்கப்படும்.

சூரியனின் தென்பாரிசத்திலிருந்து வட பாரிசத்துக்கு பூமியானது அடி எடுத்தும் வைக் கும் முதல் நாள் தை மாதம் முதல் தேதி.

அப்பொழுது பூமியின் வட பகுதியில் சூரியனின் கிரணங்கள் அழுத்தமாக விழும் அங்குள்ள காற்று வலுவிழந்து ஒதுங்கும். அந்த வெற்றிடத்தை நிரப்பப் பூமியின் தென்பகுதியி லிருந்து காற்றானது சீறி எழுந்து பாயும்.

அப்படிப்பாயும் பொழுது இந்த மகா சமுத்திரத்தில் உள்ள நீரை எல்லாம் அள்ளிக் கொண்டு ஓடும்.

ஆறுகளில் வெள்ளம் பெருகி ஓடி வரும் நெல்லும் கரும்பும் வாழையும் காயும் கனியுமாக நிலமகள் பூத்துக்குலுங்குவாள்.

இப்படியாகப் புதிய வாழ்வுக்குக் கை கொடுக்கிறது தை மாதம்.

இப்பொழுது உத்திராயணம் தொடங்கும் நாள் டிசம்பர் 27. அதாவது மார்கழி மாதம் இரண்டாவது வாரம். ஆதிகாலத்தில் இது தை மாதம் முதல் திகதியாகவிருந்தது.

பூமியின் சுழற்சியிலும் வேகத்திலும் ஏற்பட்ட சின்னஞ் சிறிய வேறுபாடு காரணமாக பல ஆயிரம் வருடங்களில் உத்திராயணம் தை மாதம் முதல் திகதியிலிருந்து மார்கழி மாதம் மாதம் 2ம் வாரத்துக்கு முன்னேறி விட்டது.

இந்த மாற்றம் வேத கால ஆரம்பத்திலேயே வந்து விட்டது.

அதனால் தான் "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கண்ணன் சொல்வதாக வியாசக முனிவர் பகவத்கீதையில் சொல்கிறார்.

வேத காலத்துக்குப் பல ஆயிரம் ஆண்டு க்கு முற்பட்டது தமிழ்த் திருநாளான தைப் பொங்கல்.

நன்றி : சக்தி

## 'நான்' என்பது இறந்தால்.......

ஞானோதயம் உண்டாகாமல் தடுப்பது அந்த அகங்காரமே.

"நான்" என்பது இறந்தால் துன்பம் எல்லாம் தொலையும்.

ஈசுரகிருபையால் "என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லை" என்னும் கொள்கை மனத்தில் உறுதிப்பட வேண்டும். இது ஸ்திர மாக நிலைக்குமானால், மனிதனுக்கு இந்த ஜென்மத்திலேயே முக்தி உண்டாகும். அப் பால் அவனுக்கு வேறு பயம் ஏதும் இராது.

-பகவான். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

## ஆன்ம ஞானம்

அறிவு நூல்கள் அனைத்தையும் கரைத்துக் குடித்திருந்தாலும் ஆன்ம ஞானம் இல்லாவிடின் அனைத்தும் வீண்.

-டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் நெஞ்சங்களிடமிருந்து....

## "சிவநெறி"யின் மகிமை

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை "சிவநெறி" என்ற அருமையான சஞ்சிகையை வெளியிடுகின்றது. சைவத்தின் மேன்மையையும் மகிமையையும் இச்சஞ்சிகை வெளிப்படுத்துகிறது.

மதங்களுக்கெல்லாம் முன்னோடியானது சைவம். உலகளாவிய சமயம் இது என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிபு. அகழ்வாராய்ச் சின்னங்களே இதற்குச் சான்று.

சைவ சமய கிரியைகள் எல்லாம் விஞ் ஞான முடிவுக்கு ஒப்பானவை. நெற்றியில் அணி யும் திருநீறு நச்சுவாயுவை உறிஞ்சிக்கொள்கின் றது. காய்க்காத மலர்களயே பூசைக்குப் பயன் படுத்துகின்றோம். ஏன்? பாவமின்மையை அது காட்டுகிறது. இதன் அற்புத மகிமையை ஞான சம்பந்தப் பெருமானின் திவ்விய சரிதம் உணர்த்தும்.

எமது மதத்தில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களை "சிவநெறி" சஞ்சிகை பரப்பி வருகிறது. இச்சஞ்சிகை வளர பரம்பொருளை பிரார்த்திக்கின்றோம்.

சி. த. நடராஜன்
நல்லை ஆதீன மேலாளர்

## பக்திக்குக் குலமேது

பக்திக்குக் குலமேது என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. என்னைக் கவர்ந்து விட்டது மனிதன் எப்படிப்பட்டவராயினும் அணுகும் முறை யில் தான் சிறப்பு இருக்கிறது. இதனை இக் கட்டுரை அற்புதமாக விளக்குகிறது. பக்திக்கு சாதி, மதம், குலம் எதுவுமே இல்லை என்பது மிக அழகாக எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றது.

வி. அமுதன்
19, சமாது ஒழுங்கை,
திருக்கோணமலை.

## பயன்தரும் கட்டுரை

ஆலயங்கள் உடல் நலத்தைப் பேணு கின்றனவா என்ற தலைப்பிலான கட்டுரை பய னுள்ளதாக இருந்தது. உடல் தூய்மைமைக்கு எமது சமயம் கொடுக்கும் முக்கியத்துவம் கட்டுரை மூலம் வெளிப்பட்டது. பாராட்டுக்கள்.

சொ. அருண்
10, சமாது ஒழுங்கை
திருக்கோணமலை.

சிவநெறியில் நல்ல கட்டுரைகள் வெளி வருகின்றன பாராட்டுக்கள்

வி. மோகனப்பிரியா
13ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை.

## சிறுவர் சிவநெறி வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் "சிவநெறி" வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் "சிவநெறி" யில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழு தும் தரமான ஆக்கங்கள் "சிவநெறி "யில் அவ்வப் போது பிரசுரஞ் செய்யப்படும்.

ஆக்கங்கள் மாணவர்கள் தாமாகவே எழுதி னார் என்பதைச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப் படுத்த வேண்டும். உறுப்பினர் உரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
ஆசிரியர்,
சிவநெறி,
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

முழுப் பெயர்: செல்வன் / செல்வி:-
..........................................................
..........................................................
வகுப்பு:...................................... வயது..................
பாடசாலையின் பெயர்:..........................................
..........................................................
மாவட்டம்:..........................................
வீட்டு முகவரி:..........................................
..........................................................
மாணவரின் கையொப்பம்:..........................................
..........................................................
பாடசாலை அதிபரின் கையொப்பம்:..........................
..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SURAMMYA TRADES

## 119 C, Seaview Road, Trincomalee.

Dealers in Rahino Steel Furnitures

1. Filling Cabinets.
2. Office Cupbords
3. Office Table
4. House Hold Cupboard with Mirror
5. China Show Case
6. Dressing Table
7. T. V. Stand
8. Chairs Etc.

**S. Sureshvaran**
01, Rajavarothayam Street,
Trincomalee.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினாவிடைப் புதிர் 18

01. இலிங்கோற்பவ காலம் என எதனைக் கூறுவோம்?
02. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் எப்போது தேர்த்திருவிழா நடைபெறும்?
03. கண்டிகை என்பதன் மறு பெயர் என்ன?
04. சித்திரை மாதத்தில் சூரியன் எந்த இராசியில் சஞ்சரிக்கும்?
05. நஞ்சுண்ட கண்டர் எனப் பெயர் வரக் காரணம் யாது?
06. அகத்தியரின் கமண்டலத்தில் இருந்த நீரை காகவடிவில் வந்து கவிழ்த்தது யார்?
07. பாடல் பெற்ற திருத்தலங்கள் எத்தனை?
08. திருக்கோணேஸ்வர ஆலய தீர்த்தத்தின் பெயர் என்ன?
09. திருமூலநாதன் நாலரை வயதில் எதனை முழுமையாக மனனம் செய்து முடித்தார்?
10. திருநாவுக்கரசு நாயனார் பாடிய நமச்சிவாயப் பதிகத்தின் முதல் வரியைக் கூறுக?

குறிப்பு : இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

பெயர்.................................................................................

முகவரி..............................................................................

.........................................................................................

முடிவுத் திகதி : 15 - 06 - 1996

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர், சிவநெறி,
தி. மா. இ. இ. பேரவை,
~~939,~~ 393, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.

## இந்து சமய வினாவிடைப் புதிர் ~ 17

**பரிசு பெறுவோர் விபரம்**

முதலாம் பரிசு : தே. லோயினி மலர்
ஞானோதய அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்

இரண்டாம் பரிசு : அ. ஜென்சிக்கா
ஞானோதய அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா.

மூன்றாம் பரிசு : பரமலிங்கம் குகாநந்தா
17A, உள்துறைமுக வீதி, அரச விடுதி, திருக்கோணமலை.

ஆறுதல் பரிசு :
செல்வன். பா. சிவகேஸ்வரன்
தி/ஞானோதய அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்.
செல்வி. சி. ரேவதி
செயலாளர், நாமகள் சனசமூக நிலையம், சூடைக்குடா.
செல்வன். த. இராஜேஸ்வரன்
தி/ஞானோதய அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்.
செல்வன். வீ. சுபன்
தி/ஞானோதய அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்.


FUJICA ENTERPRISES

59, Rajavarothiam Road, Trincomalee.

*Dealers in Photographic Materials.*

*We Undertake*

- **English, Tamil Typing**
- **Translation**
- **Letter Drafting and**
- **Colour Films for Processing and Printing at Reasonable Rates**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் வேண்டும் "சிவநெறி" அன்பு

# சாலிங்கா முகவர் தபால் நிலையம்

281, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

326, உவர்மலைச் சந்தி,
திருக்கோணமலை.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு இடங்களிலும் சாலிங்கா முகவர் நிலையம் இயங்குகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்களுக்குத் தேவையான

மணி ஆர்டர், உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசிச் சேவை, போட்டோ கொப்பி, Fax, முத்திரை, பதிவுத்தபால் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

சாலிங்கா முகவர் தபால் நிலையம் துரிதசேவை வழங்குவதில் முன்னணியில் நிற்கின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

22479, 22067, 22417, 22352, 22798.

"சிவநெறி" பல்லாண்டு வளர வாழ்த்துகிறோம்.

# நியூ அம்பாள் கபே

79, தபாற் கந்தோர் வீதி,
திருக்கோணமலை.

சைவ உணவிற்கு நம்பிக்கையான இடம்.

தங்களது திருமண வைபவங்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றிற்கு ஆர்டர்கள் கொடுப்பின் திறமையான முறையிலும் கூடிய விரைவாகவும் ருசிகரமாகவும் ஆர்டர்கள் கவனிக்கப்படும்.

விரத காலங்களிலும் நம்பிக்கையான சைவ உணவை வழங்குவதில் முதலிடம் பெறுபவர்கள்.

## அம்பாள் கபே

தொடர்பு கொள்ள தொலைபேசி இலக்கம்.
026-22479



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஐந்தாவது திருவாசகமுற்றோதல் 02 - 01 - 1996ல், மகேஸ்வரி மண்டபத்தில் பக்திப்பூர்வமாக நடைபெற்றது. பேரவையின் காப்பாளரான ஞான சிரோன்மணி பண்டிதர் திரு. இ. வடிவேல் அவர்கள் முன்னின்று முற்றோதலை நெறிப்படுத்தினார்கள்.

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச்சரம்

★ ஈச்சிலம்பற்றுப் பிராந்தியத்திற்கு அண்மையில் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளரின் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழுவினர் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்து சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் சில வருடங்களாகக் கட்டி முடிக்கப்படாதிருந்த மாவடிச்சேனை மக்களுக்கான கிணறு கட்டி முடிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. மேலும் ஈச்சிலம்பற்று இணைப்பாளராகத் திரு. இ. நாகலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பிராந்தியத்தில் இந்து இளைஞர் மன்றங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டுப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

★ இவ்வருடம் தொடக்கம் பேரவையினால் மகேஸ்வரி மண்டபத்தில் மகாசிவராத்திரி தினம் பக்தி சிரத்தையுடன் நான்கு சாமப் பூசைகளுடனும் ஆராதனைகளுடனும் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் ஞானசிரோன்மணி பண்டிதர் திரு. இ. வடிவேல் அவர்களின் கதாப் பிரசங்கம், இசைச் செல்வன். திரு. அ. விக்னேஸ்வரன் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி, சமயக் கலந்துரையாடல், சமய ஆய்வு, சந்தேகந் தெளிதல் போன்ற பல ஆன்மீக விடயங்களும் இடம் பெற்றன.

★ இவ்வருடம் மகாசிவராத்திரி தினத்தன்று கிழக்கு மாகாணத்திலேயே முதன் முதலாகப் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியை நாம் ஆரம்பித்தது இறைவன் திருவருட் செயலாகும். பேரவையின் காப்பாளர் ஞானசிரோன்மணி பண்டிதர். இ. வடிவேல் அவர்கள் தலைமையில் இம்முற்றோதல் ஆரம்பமாகித் தொடர்ந்து தினமும் ஓதப்பட்டு வருகின்றது.

★ அண்மையில் இடம் பெற்ற தம்பலகமம் கள்ளிமேடு விநாயகர் ஆலயம், முள்ளியடி விநாயகர் ஆலயம், இலிங்கநகர் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் முதலியவற்றின் மகா கும்பாபிஷேகங்களின் போது மூன்று ஆலயங்களுக்கும் பேரவையால் பூசைக்கான மங்கலப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மொத்த நிதி 5,000/- ரூபாவாகும்.

★ கிண்ணியா அருள்மிகு அம்மன் ஆலயத்துக்கு பேரவையால் இரு பெரிய இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. மொத்த நிதி 10,000/- ரூபாவாகும்.

★ ஈச்சிலம்பற்றுப் பிராந்தியத்திலுள்ள வாழைத்தோட்டம் கிராம மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன மொத்தப் பெறுமதி 2,00,000/- ரூபாவாகும். நிதி உதவி அவுஸ்திரேலிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

★ அண்மையில் இடம்பெற்ற கிளிவெட்டிக் குமாரபுரம் அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் உற்றார்களுக்கும் பல்வேறுவிதமான மனிதாபிமான உதவிகளைப் பேரவையும் பேரவையின் மூதூர் உப அலுவலகத்தினரும் வழங்கினர். மொத்தப் பெறுமதி 5,000/- ரூபாவாகும்.

★ யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகிகளூடாக பின்வரும் அடிப்படையில் நிவாரண உதவிகள் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| (அ) நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு..... | 2,500/- |
| (ஆ) தெல்லிப்பளை துர்க்கா மகளிர் இல்லத்துக்கு...... | 2,500/- |
| (இ) பொதுவான நிவாரணப் பணிகளுக்கு..... | 20, 000/- |
| மொத்தம்.. | 25,000/- |

## தியானம்

பசி ஒரு நாய். கடவுள் நினைவில் ஈடுபட்டிருக்கும் போது இடையூறு செய்கிறது.
அதற்கு ஒரு துண்டை எறிந்து விட்டுக் கவலையின்றி தியானம் செய்.

- ஸ்ரீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாத காட்சி

ஒருமூலன் தந்தனன் ஒரு மூன்று ஆயிரம்
உயர்வான தமிழை அன்று!
திருமூலன் என்றுமே செப்பினார் இன்றுமோர்
சீரான புலவனே தான்!
திருமூலநாதனும் தேடியே வந்துளான்
தெய்வத்தின் அருளினோடு!
வருமூலநாதனை வாழ்த்தியே - போற்றியே-
வணங்கியே மகிழுவோமே!

ஞானக்குழந்தையாய் நல்ல சம்பந்தரினை
நாடன்று கண்டதுண்டு!
ஞானக்குழந்தையாம் நம்மூலநாதனை
நாமின்று கண்டுவிட்டோம்!
மோனக்குறள்தன்னை முற்றாய் உணர்ந்துமே
முறையாக மீட்டெடுக்கும்
கானக்குயில் தன்னைக் கண்டதால் யாமெலாம்
காணாத காட்சி கண்டோம்!

சின்னக்குறள் தன்னைச் சின்னத் திருமூலன்
செப்பிடும் தன்மை கண்டோம்!
பென்னம் பெரியனாய்ப் பேரறிவு பெற்றிட்ட
பெருவிந்தை தனையறிந்தோம்!
என்னென்ன செய்வனோ இனிவருங்காலத்தில்
என்பதையும் எண்ணலானோம்!
மன்னவன் கல்வியில் - மறவாத தன்மையில்
மானிலம் போற்ற வாழ்க!

பெற்றோரும் வாழ்ந்திடுக! பிள்ளை நாதன் வாழ்க!
பெருங்குறட் சோதி வாழ்க!
கற்றோர்கள், கண்டோர்கள், கேட்டோர்களும் குறட்
கதை சொல்லி வாழ்க! வாழ்க!
மற்றோரும் குறள் தன்னை மறவாமலே கற்று
மாமூலனாகி வாழ்க!
சற்றுமே மாறாத - மறையாத மறையான
தமிழ்பெற்ற குறள் வாழ்கவே!

தாமரைத்தீவான்

*ஞானக்குழந்தை, திருக்குறள் திருவளர்செல்வன் எனப்போற்றிப் புகழப்படும் ஏழுவயதுப்பாலகன் திருமூல - நாதன் தனது நான்கு வயதில் 1330 குறட்பாக்களையும் மனனஞ்செய்து வரலாறு காணாத உலக சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்.*

*இவர் கடந்த மார்ச் மாதம் 6ம் திகதி தமிழகத் திலிருந்து திருக்கோணமலைக்கு விஜயம் செய்தார். இவரின் வருகையை நினைவுகூர்ந்து இக்கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.*

## சக்தியின் தன்மை

மண்ணில் திண்மையாக
நீரில் குளிர்ச்சியாக
நெருப்பில் வெம்மையாக
காற்றில் ஊக்கமாக
வானில் அறிவாக
மலரில் மணமாக
தேனில் சுவையாக
பதம் என்ற பதியிடத்தில்
பிரிவின் நிற்கும் நிலையானது
சக்தி!

## சிவகாமி

சிவசக்தியைக் காமுறுவது, சக்தியைச் சிவம் காமுறுவது என்றும்.

இது சிவத்தை நமக்குக் காட்டுவதால் சிவகாமி எனக்காரணப் பெயராயிற்று.

நன்றி - ஆன்மசக்தி

## தேவி துதி

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கையர்க்க ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லறம் நடத்துவது எப்படி?

இல்லறம் நடத்துங்கள்.

ஆனால் ஒரு கையால் வாழ்க்கையின் கடமைகளைச் செய்து கொண்டு, இன்னொரு கை ஆண்டவனின் கால்களை விடாமல் பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

வேலை செய்யாமல் இருக்கும் போது இரண்டு கைகளும் ஆண்டவனின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

நல்ல செவிலித்தாயானவர் தன் எஜமானியின் குழந்தையை எடுத்துப் பால் கொடுத்து வளர்க்கிறாள்.

பெற்றதாய் போலவே அன்பு செலுத்திப் பால் கொடுத்து வந்தாலும், "இந்தக் குழந்தை எனக்கு ஒன்றும் செய்யப் போவதில்லை. இது என்னடைய சொத்து அல்ல. பால் ஊட்டுவது மட்டுமே இதனுடன் என் சம்பந்தம்" என்று செவிலித்தாய் தனது கடமைகளைச் செய்கிறாள். இது போலப் பக்கர்கள் இல்லறத்தை ஆண்டவனின் பணியாக எண்ணிச் செய்து வர வேண்டும்.

ஒரு வீட்டில் வேலைக்காரி என்ன உணர்ச்சியோடு "இது நம்ம வீடு" என்று சுவாதீனமாகச் சொல்கிறாள்?

அவள் சொந்த வீடு எங்கேயோ கிராமத்தில் இருக்கிறது. அவள் பட்டணத்தில் வேலை செய்து வருகிறாள். ஆனால் தான் வேலை செய்யும் வீட்டை "நம்ம வீடு" என்கிறாள். எஜமானியின் குழந்தையை எடுத்து "என் கண்ணே என்று சீராட்டுகிறாள் - பிறரிடம் "என் கோபாலன் ரொம்பத் துஷ்டன்" என்று செல்லமாகவும் - "என் கோபாலனுக்கு ரொம்பப் பசி. பாவம்" என்று இரங்கியும், கொஞ்சியும் பேசுகிறாள்.

அப்படிப் பேசும் போது "கோபாலன் எஜமானியின் குழந்தை. தன் குழந்தையல்ல. தன் குழந்தை ஊரில் தன் பாட்டியிடம் இருக்கிறது" என்பதை அவள் மறக்கவில்லை.

எனது இல்லறச் சீடர்களே! நீங்களும் வேலைக்காரி பாவத்தில் இல்லறத்தை நடத்துங்கள்.

## யார் அழுகிறார்கள்?

நாம் மாயையிலிருந்து மீள வேண்டும் என்று விரும்பினால் ஆண்டவனே வழிகாட்டுவார். விரும்புவது என்பது வாய்ப்பேச்சில் மட்டும் இருக்கக் கூடாது. விடுபட வேண்டும் என்ற ஆசை மேலிட்டு உள்ளம் அதில் கரைய வேண்டும். குழந்தைக்காகவும் மனைவிக்காகவும் பணத்துக்காகவும் மணிக்கணக்கில் கண்ணீர் விட்டு அழுகிறோம். ஆனால் ஆண்டவனை அடைய வேண்டும் என்று யார் அழுகிறார்கள்?

## "நான்" என்பது இறந்தால்...

ஞானோதயம் உண்டாகாமல் த டுப்பது அந்த அகங்காரமே.

"நான்" என்பது இறந்தால் துன்பம் எல்லாம் தொலையும்.

ஈசுர கிருபையால் ""என் செயலால் ஆவது யாதென்றும் இல்லை" என்னும் கொள்கை மனத்தில் உறுதிப்பட வேண்டும். இது ஸ்திரமாக நிலைக்குமானால், மனிதனுக்கு இந்த ஜென்மத்திலேயே முக்தி உண்டாகும். அப்பால் அவனுக்கு வேறு பயம் ஏதும் இராது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்
சிறந்த காளி உபாசகர்
அன்னாரின் அருள்மொழிகளிலிருந்து
சில இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

## இறைவன் சிரிக்கிறான்

ஈஸ்வரன் இரண்டு சமயங்களில் புன்னகை புரிகின்றான். முதலாவது, ஒருவன் கொடும் நோயினால் அவதிப்பட்டு மரணத்தறுவாயில் இருக்கும் போது "பயப்பட வேண்டாம்; உப் மகனுடைய உயிரைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்" என்று டாக்டர் தாயிடம் கூறும் போதும்-

இரண்டாவது, இரண்டு சகோதரர்கள் தங்களுடைய நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ள அளவு கோலைக் கையிலெடுத்துக் கொண்டு கோடு கிழித்து, "அந்தப் பக்கம் உன்னுடையது இந்தப் பக்கம் என்னுடையது" என்று சொல்லும் போதும் இறைவன் சிரிக்கிறான்.

## தாயும் கடவுளும்

தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை.

தன்னல மற்றது தாயின் நெஞ்சம்
தாய்மை நிறைந்தது கடவுளின் நெஞ்சம்
மன்னுயிர் காத்தவர் மாந்தருள் தெய்வம்
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும், சமூகப்பணியும் அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே திருக்கோணமலை மாவட்ட**

## இந்து இளைஞர் பேரவை ஆகும்.

## இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்

கணனி எழுத்தமைப்பு, ஓவ்செற் அச்சமைப்பு, ஸ்ரீ கணேச அச்சகம், திருக்கோணமலை. ☎ 026 - 22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org